
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 26.02.2025 புதன்கிழமை இதழ் : 57 பக்கங்கள் : 12

காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கோரும்

# இலங்கையின் பொறுப்புக்கூறல் சர்வதேச கவனம் பெற்றுள்ளது!

## மனித உரிமைகள் ஆணையாளரின் பணிமனை

ஜெனிவா, பெப்ரவரி 26

**காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டங்கள் - கருத்துகளின் மூலமாகக் கோரும் பொறுப்புக்கூறல் சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளது என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பணிமனை தெரிவித்துள்ளது.**

உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள், நிலைமாறுகால நீதி நிலவரம் தொடர்பில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பணிமனை பேரவைக்கு சமர்ப்பித்த அறிக்கையிலேயே இலங்கை தொடர்பில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் இலங்கை தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு,

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட சர்வதேச தளங்களில் பங்கேற்று அவர்கள் வெளிப்படுத்தும் கருத்துகள் என்பவற்றின் ஊடாக பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்ட அவர்களின் கோரிக்கை சர்வதேச அவதானம் பெற்றுள்ளது.

அத்துடன், இந்த முயற்சிகள் சிவில் சமூக அமைப்புகள் ஊடாக மேலும் வலுப்படுத்தப் பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட தரப்பினருடனான பரந்துபட்ட கலந்துரையாடல்களின் அடிப்படையில் கடந்த 2016 ஆம் ஆண்டு 11

# இலங்கை தொடர்பில் பேசாத மனித உரிமை ஆணையாளர்

ஜெனிவா, பெப். 26

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரின் முதல் நாளில் உரையாற்றிய ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் இலங்கை தொடர்பில் எதுவும் பேசவில்லை.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத் தொடர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத் தொடர் எதிர் வரும் ஏப்ரல் 4ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தொடக்க உரையை ஆற்றிய மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க், அதில் அவர் இலங்கை குறித்து எதனையும் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 'பொன் அணிகளின் போர்' நாளை ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம், பெப். 26

'பொன் அணிகளின் போர்' என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி - வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி அணிகளின் பெருந் துடுப்பாட்டப் போட்டி நாளை ஆரம்பமாகிறது.

108ஆவது ஆண்டாக நடைபெறவுள்ள இந்தப் பெருந்துடுப்பாட்டப் போட்டி நாளை 11

# டிராக்டர் கவிழ்ந்து குடும்பஸ்தர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 26

வேகக் கட்டுப்பாட்டை இழந்து டிராக்டர் கவிழ்ந்த விபத்தில் அதனை செலுத்திய இளம் குடும்பஸ்தர் உயிரிழந்தார்.

நெடுந்தீவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நவரத்தினம் ஐங்கரன் என்பவரே உயிரிழந்தார்.

டிராக்டர் நெடுந்தீவு பிரதேச மருத்துவமனைக்கு அருகே மதவடி பகுதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் படுகாயமடைந்த அவர் உடனடியாக பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும், அவர் உயிரிழந் தார்.

சம்பவம் தொடர்பில் நெடுந்தீவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 'பட்ஜெட்'டின் இரண்டாம் வாசிப்பு பாராளுமன்றில் நிறைவேறியது!

## செல்வம் ஆதரவு; தமிழ் அரசு புறக்கணிப்பு

கொழும்பு, பெப். 26

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு பாராளுமன்றத்தில் 109 பெரும்பான்மை வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்புக்கு ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் பதிவாகின.

வரவு - செலவு திட்டத்துக்கு ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் செல்வம் அடைக்கலநாதன் எம். பி. ஆதரவாக வாக்களித்தார். அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எதிர்த்து வாக்களித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் எம்.பிக்கள் மற்றும் சுயேச்சை எம்.பி. அர்ச்சுனா ஆகியோர் 11

# துப்பாக்கிச்சூட்டில் 17 பேர் உயிரிழப்பு!

## இந்த ஆண்டில் மட்டும்

கொழும்பு, பெப். 26

இந்த ஆண்டில் 17 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றில் 17 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் 49 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பொலிஸ் தலைமையகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், 17 துப்பாக்கிச்சூட்டு 11

# நாமல் ராஜபக்ஷவின் உயிருக்கு அச்சுறுத்தல்

## சாகர காரியவசம்

கொழும்பு, பெப். 26

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு உயிர் அச்சுறுத்தல் உள்ளது என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நேற்று செவ்வாய்கிழமை பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாமல் ராஜ பக்ஷவை விரைவில் குழிக்கு அனுப்புவோம் எனக் குறிப்பிட்டுள்ளார். அவரின் 11

# அரச பாதுகாப்பு எனக்கு அவசியம்

## அர்ச்சுனா எம். பி.

கொழும்பு,பெப். 26

நீதிமன்றத்தில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அத்துடன், கடந்த வாரங்களில் பல்வேறு கொலை சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இவை எனது பாதுகாப்பு தொடர்பில் கரிசனையை ஏற்படுத்தியுள்ளன. ஆகவே, எனக்கு இரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை வழங்க வேண்டும் - இவ்வாறு சபாநாயகரை கோரியுள்ளார் யாழ். மாவட்ட சுயேச்சை எம். பியான இ.அர்ச்சுனா.

பாராளுமன்றத்தில் நேற்றையதினம் சிறப்புரிமை 11

# நெருக்கடியான சூழலிலேயே பட்ஜெட் தயாரிக்கப்பட்டது!

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 26

நெருக்கடியான சூழலில்தான் வரவு - செலவு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். எதிர்க்கட்சிகள் மாத்திரம் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றன - இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு - செலவு திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே 11

# வறட்சி தொடர்ந்தால் மின் கட்டணம் உயரும்

## மின்சக்தி, எரிசக்தி அமைச்சர்

கொழும்பு, பெப். 26

நாடளாவிய ரீதியில் நிலவு வறட்சி தொடருமானால் மின்சார கட்டணத்தை அதிகரிக்க நேரும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட பொறியியலாளர்களின் 11

# மகேந்திரனை நாட்டுக்கு அழைத்து வர முயற்சி!

## அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 26

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை மீண்டும் விசாரணைக்கு அழைத்து வருவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதில் அதிகாரிகள் சில சட்ட சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். அவரை இலங்கைக்கு நாடு கடத்த அரசாங்கம் அனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும்!

## இந்திய பிரதி உயர்ஸ்தானிகரிடம் கடற்றொழில் அமைச்சர் வலியுறுத்து

கொழும்பு, பெப். 26

**இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபடுவதை தடுப்பதற்கு இந்திய ஒன்றிய மற்றும் தமிழக அரசாங்கம் என்பன காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கடற்றொழில், நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் கோரிக்கை விடுத்தார்.**

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைவதாலேயே அவர்கள் கைது செய்யப்படுகின்றனர். மீனவர் விவகாரத்தை மனிதாபிமானத்துடனேயே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அணுகுகின்றது என்றும் அமைச்சர் இதன்போது கூறினார்.


இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் சத்தியஞ்சல் பாண்டே, கொழும்பு மாளிகாவத்தையிலுள்ள கடற்றொழில் அமைச்சுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை வருகை தந்தார். இதன்போதே அமைச்சர் இந்த விடயங்களை தெரிவித்தார்.

அமைச்சருக்கும், பிரதி உயர்ஸ்தானிகருக்கும் இடையிலான சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், கலாசார மற்றும் பொருளாதார உறவுகள் பற்றி பேசப்பட்டாலும் மீனவர் பிரச்னை குறித்த விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது இந்திய மீனவர்களின் இழுவை படகு உட்பட சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையால் வடக்கு மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் இலங்கையின் கடல் வளத்துக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் பற்றி அமைச்சர் எடுத்துரைத்தார்.

குறிப்பாக தமிழகத்திலுள்ள பணபலம் படைத்த முதலாளிமார், அரசியல்வாதிகள் மீனவர்களை பகடைக்காயாக பயன்படுத்த முற்படுகின்றனர் எனவும் தமது வாழ்வாதாரம் பற்றி மட்டுமே அவர்கள் சிந்திக்கின்றனர் என்றும் வடக்கு மீனவர்களின் நிலை பற்றி சிந்திப்பதில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே, இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு இந்திய ஒன்றிய மற்றும் தமிழக அரசுகள் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் அமைச்சர் கோரிக்கை விடுத்தார். (ஐ)



## சாவகச்சேரியில் அனுமதியின்றி ஏற்றிவரப்பட்ட 18 மாடுகள் மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 26

உரிய அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக லொறி ஒன்றில் ஏற்றி வரப்பட்ட 18 மாடுகளை சாவகச்சேரி பொலிஸார் மீட்டனர். அத்துடன், சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

நேற்று முன்தினம் இரவு, யாழ்ப்பாணத்தில் இருந்து மாடுகளை ஏற்றி வந்த லொறியை சாவகச்சேரி நகரில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வழிமறித்து சோதனையிட்டபோதே மாடுகள் மீட்கப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (ஐ-05)

# தொற்றுநோய் தடுப்பு விழிப்புணர்வு பேரணி

வடமராட்சி, பெப். 26

தொற்றுநோய் தடுப்பு விழிப்புணர்வு நடைபவனியும் பரிசளிப்பு விழாவும் நேற்று பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நடைபெற்றது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் தொற்றுநோய் தடுப்பு பிரிவின் ஏற்பாட்டில் ஏ. ஐ. ஏ. காப்புறுதி நிறுவனத்தின் அனுசரணையில் பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளின் வழிகாட்டலுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் யோ. திவாகர் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

நெல்லியடி மாலைசந்தை பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமான நடைபவனி பருத்தித்துறை ஆதார மருத்துவமனை வரை நடைபெற்றது. இதைத் தொடர்ந்து மேடை நிகழ்வுகள் நடைபெற்றன.

தொடர்ந்து தொற்றுநோய் தொடர்பாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ஐ-02)

# நெடுந்தீவில் மனித உரிமைகள் குழுவின் குறைகேள் சந்திப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய பணிமனையின் ஏற்பாட்டில் நெடுந்தீவு பிரதேசத்தில் பொதுமக்கள் குறைகேள் சந்திப்பு நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் உட்பட அதிகாரிகள் கலந்துக்கொள்ளவுள்ளனர்.

இந்த சந்திப்பில் நெடுந்தீவு வாழ் பொதுமக்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை கலந்துக்கொள்ளுமாறு யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் கேட்டுள்ளார். (ஐ)

## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், பெப். 25

கோண்டாவில் றோ. க. த. க. பாடசாலையின் இல்ல மெய்வன்மை போட்டி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை மைதானத்தில் அதிபர் க. நித்தியானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை செயலாளர் யு. ஜெலீபன், சிறப்பு விருந்தினர்களார் கிராம சேவையாளர் ம. தனுஷன், ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி ரதிரஞ்சிதம் பகீரதன், யாழ். மாநகர சபை ஊழியர் த. தஜித் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

## சாந்தனின் துயிலாலயம் வெள்ளியன்று அர்ப்பணம்

வடமராட்சி, பெப். 26

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி பல வருட சிறைவாசத்தின் பின்னர் விடுதலையாகி தமிழ்நாட்டில் உயிரிழந்த சாந்தனின் துயிலாலயம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அர்ப்பணம் செய்யப்படவுள்ளது.

33 ஆண்டுகள் தாயக மண்ணுக்காக சிறையிருந்து சிறையிலேயே சாவடைந்த சாந்தனின் முதலாம் ஆண்டு நாளில் அவர் விதைக்கப்பட்ட இடத்தில் அவர் குடும்பத்தாரால் அமைக்கப்பட்ட துயிலாலயத்தை அவரின் தாயார் திறந்து வைக்கவுள்ளார். (ஐ-02)

# யாழில் இசை போட்டி இன்று ஆரம்பமாகிறது



யாழ்ப்பாணம், பெப். 26

யாழ். இசைக் கலையகத்தின் 26ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாடாளவிய ரீதியிலான இசைப் போட்டி யாழ்ப்பாணம் - திருமறைக் கலாமன்றத்தில் இன்று புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாக கலையகத்தின் தலைவர் செல்வ. ரவிசங்கர் தெரிவித்துள்ளார்.

மேலும், 16 - 35 வயதுக்கு இடைப்பட்ட இசை ஆர்வலர்களை வெளிக்கொண்டு வரும் முயற்சியாக இந்தப் போட்டி அமைந்துள்ளது. பல இசைக் கலைஞர்கள் இலைமறை காயாக மறைந்துள்ள நிலையில் அவர்களை வெளி உலகுக்கு எடுத்து காட்டும் முயற்சியாக இந்த போட்டி அமைகிறது. இந்தப் போட்டியில் ஏற்கனவே விண்ணபித்தவர்கள் தவிர புதிதாக இணைய விரும்புபவர்கள் இன்றைய தினமே இணைந்து கொள்ள முடியும்.

இறுதிப் போட்டி ஏப்ரல் மாதம் நடைபெறும் இந்தப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெறும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும் - என்றும் கூறினார். (ஐ-05)

## ஆசிரியர் கலாசாலையில் சஞ்சிகை விமர்சன அரங்கு

யாழ்ப்பாணம், பெப். 26

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை நடந்த ஒன்றுகூடல் கி.செ. துரையின் உலகச் செய்திகள் என்ற சஞ்சிகையின் வெளியீடு மற்றும் விமர்சன அரங்காக நடைபெற்றது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவி திருக்குமரன் அஞ்சலோ பெலினி நெறிப் படுத்தினார்

உலகச் செய்திகள் சஞ்சிகைக்கான விமர்சன உரைகளை விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர் இலகுநாதன் செந்தூர்ச்செல்வன், ஆங்கில நெறி ஆசிரிய மாணவி நிரோஜன் கௌசிகா கிறிஸ்தவ நெறி ஆசிரிய மாணவி சுதாகர் கமலினி ஆகியோர் நிகழ்த்தினர்



கலாசாலையின் பழைய மாணவரும் (1980/81) பிரபல ஊடகவியலாளருமான கே. எஸ். துரை - ஆசிரியரால் முடியுமா? என்ற பொருளில் ஊக்குவிப்பு உரையாற்றினார். கலாசாலை அதிபர் ச. லலீசன் நிறைவுரை ஆற்றினார்

உலகச் செய்திகள் இதழின் முதல்பிரதியை ஆசிரியர் கி. செ. துரை கலாசாலை அதிபரிடம் கையளித்தார். இந்த சஞ்சிகை ஆசிரிய மாணவர்கள், விரிவுரையாளர்கள் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.02.2025 புதன்கிழமை
பிலவ வருடம், மாசி 14

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மக்களின் மறதியே அரசியல்வாதிகளின் பலம்

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விடயத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மேலதிக வகுப்புக்கு செல்லவேண்டும் என்று எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின் றார். அண்மையில், இடம்பெற்ற நீதிமன்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சில துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகளை முன்வைத்தே சஜித் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின் றார்.

அரசாங்கம் தேசிய பாதுகாப்பு கொள்கை தொடர்பில் எவ்வா றான நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்கின்றது - கடைப்பிடிக்கலாம் என்பது பற்றிய பார்வைக்குள் இந்தத் தலையங்கம் செல்லவில்லை. ஏனெனில், பாதாள உலகக் குழுக்களின் பிரச்னை கொழும்புக்கு புதியது அல்ல. அத்துடன், இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுகின் றமை முதல் தடவையும் அல்ல - கடைசியாகவும் இருக்கப் போவ தில்லை. இந்த நிலைமையை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்தே நோக்க வேண்டும்.

இங்கு கருத்தில் கொள்ளப்படும் விடயம் வேறு. சஜித்தின் கூற்று ஓர் உதாரணமாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அரசியல் வாதிகள் பொதுவாக மக்களை சொற்பகால ஞாபகசக்தி உள்ளவர் களாகவே கருதுவதுண்டு. இதன் காரணமாகவே, மிகவும் இலகு வாக தங்களுடைய ஆட்சிக் காலத்தை புறந்தள்ளிவிட்டு புதிய ஆட்சியாளர்களை விமர்சிக்கப் புறப்பட்டு விடுவதுண்டு.

எதிர்க்கட்சித் சஜித் பிரேமதாஸ அங்கம் வகித்த நல்லாட்சி என்று கூறப்பட்ட ஆட்சிக் காலத்தில்தான் இலங்கையின் வரலாற்றில் முதலாவது இஸ்லாமிய பயங்கரவாதத் தாக்குதலான ஈஸ்டர் தாக்கு தல் இடம்பெற்றது. வெளிநாட்டவர்கள் உட்பட பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இலங்கையில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலில் வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் முதன்முத லாக பதிவானது. இவ்வாறானதோர் ஆட்சியில் அங்கம் வகித்த ஒருவர்தான் தற்போது - இன்னொரு தரப்புக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பில் மேலதிக வகுப்புக்குச் செல்ல வேண்டும் என்று அறிவுரை கூறுகின்றார்.

அரசியல்வாதிகள் மக்கள் சிந்திக்கக் கூடியவர்கள் என்று ஒரு போதும் எண்ணுவதில்லை. காரணம் மக்கள் கடந்த மாதம் நடந் ததைக்கூட நினைவில் வைத்துக் கொள்ளும் நிலையில் இருப்ப தில்லை. அன்றாட பிரச்னைகளுக்குள் தினமும் விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கும் சாதாரண மக்கள் ஒருபோதும் கடந்த காலத்துக்குள் செல்வதில்லை. இதனால் அரசியல்வாதிகள் எவ்வாறான வாக்குறுதி களை வழங்கினார்கள், அவர்களின் காலத்தில் நடந்தது என்ன என்பதைப் பற்றியெல்லாம் எண்ணிப்பார்க்கும் நிலையில் இல்லை. இது மறுபுறம், மக்களை தொடர்ந்தும் இலகுவாகக் கையாள்வதற்கான வாய்ப்பை அரசியல்வாதிகளுக்கு வழங்குகின்றது.

தமிழ்ச் சூழலை எடுத்து நோக்கினால் ஒவ்வொரு தேர்தல் கால கட்டத்திலும் வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளை கோருபவர்கள் தங்களின் வாக்குறுதியில் ஒரு சில விடயங்களைக்கூட நிறைவேற் றாமலேயே மீண்டும் மக்களிடம் செல்வதுமுண்டு. மக்களும் கேள்விகளின்றி வாக்களிப்பதுண்டு. இதற்குக் காரணம் மக்களின் மறதிதான். மக்களுக்குக் கடந்த காலத்தை நினைவுபடுத்திக் கொண் டிருக்கும் பொறுப்பான ஊடகங்களும் சமூக செயல்பாட்டு இயங்கங் களும் இருக்கின்றபோது மட்டும்தான் இந்த நிலைமையில் அதிர்வு களை ஏற்படுத்த முடியும்.

## சுவிஸ் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவகம் உதயமானது

சூரிச், பெப். 26

சுவிட்ஸர்லாந்து நாட்டில் வாழும் தமிழ்பேசும் தொழில் முனைவோர்களுக்கிடையில் கூட்டுறவையும் ஒன்றிணைவையும் பலப்படுத்தி தமிழ் மக்களின் அறிவியல், சமூக, பொருளாதார, ஆன்மிக கலை பண்பாட்டு பாரம்பாரிய அலகுகளை கட்டியமைத்தல், தாயகத்தில் உள்ள தமிழ் மக்களின் சமூக மேம்பாட்டினையும் இலக்காகக்கொண்டு சுவிஸ் தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவகம் உருவாக்கப்பட்டுள்ளது.

தலைவர் இளையதம்பி சிறிதாஸ் தலைமையில் சூரிச் கில்டன் கார்டன் விடுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் சுவிஸ் நாட்டில் வாழும் தமிழ் வர்த்தகர்களும் பெருந்தொகையான சமூக ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.



சுவிஸ் நாட்டில் வாழும் தொழில் முனைவோர்களுக்கிடையில் கூட்டுறவு ஒற்றுமை, கூட்டுமுயற்சிக்கு பங்காற்றுவதுடன் தமிழர்களின் கலைகலாச்சார பொருளாதார அறிவியல் உட்பட பல்வேறு மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு பங்காற்றல். அனைத்து அரசுகளின் ஒத்துழைப்புடன் இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் உற்பத்திகளை அதிகரிக்கக்கூடிய தொழில் முயற்சிகளை இயற்கைவளங்களுக்கு பாதிப்பில்லாத வகையில் செயற்திட்டங்களை வகுத்து செயற்படுத்தப்படவுள்ளதாகவும் அமைப்பின் தலைவர் இளையதம்பி சிறிதாஸ் தெரிவித்தார்.

அத்துடன் உலகளாவிய ரீதியில் உள்ள தனவந்தர்கள் தொழில் அதிபர்கள் உட்பட பல்வேறு தரப்பினரின் நிபுணத்துவ சேவையினையும் பெற்றுக்கொண்டு இலங்கையில் புதிய முதலீடுகள் தொழில் முயற்சியாண்மை வேலைத்திட்டங்களில் ஈடுபடவிரும்பும் தொழில் முனைவோருக்கு ஆலோசனைகளையும் ஒத்தாசைகளையும் வழங்கவுள்ளதாகவும் தலைவர் மேலும் தெரிவித்தார்.

சுவிஸ்நாட்டில் வாழும் இலங்கையைப் பூர்வீகமாகக்கொண்ட 18 வயதிற்கு மேற்பட்ட தொழில் முனைவோர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் அமைப்பின் உறுப்புரிமையைப்பெறமுடியும் என அமைப்பின் செயலாளர் இராசமாணிக்கம் ரவிந்திரன் தெரிவித்தார். (அ)

## கந்தகாடு முகாமிலிருந்து 4 கைதிகள் தப்பியோட்டம்!

கொழும்பு, பெப். 26

பொலநறுவை கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 4 கைதிகள் நேற்று செவ்வாய்க்கிழமை தப்பிச் சென்றுள்ளனர் என்று வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

தப்பிச்சென்ற கைதிகள் நால்வரும் 29 மற்றும் 34 வயதுடையவர்களாவர். கைதிகள் நால்வரும் போதைப்பொருளுக்கு அதிகம் அடிமையானவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்திலிருந்து பல கைதிகள் தப்பிச்சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் வெலிகந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 5,953 கிலோ போதைப்பொருட்கள் கடந்த ஆறு மாதங்களில் மீட்பு


கொழும்பு, பெப். 26

நாடு முழுவதும் கடந்த 6 மாதங்களில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் 5 ஆயிரத்து 953 கிலோ போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், அவற்றை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட 31 கோடியே 80 இலட்சம் ரூபாயும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.


பொலிஸ் தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

போதைப்பொருள் தொடர்பில் பொலிஸாரால் நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்புகள் நாளாந்தம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய கடந்த 6 மாதங்களில் 366 கிலோ ஹெரோயின், 4,796 கிலோ கஞ்சா, 791 கிலோ ஐஸ் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன், இவற்றை விற்பனை செய்ததன் மூலம் பெற்றுகொண்ட 31 கோடியே 80 இலட்சம் ரூபாய் பணமும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
உங்கள் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்து கொள்வார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**இடபம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். எதிர்பார்த்தஇடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.உற்சாகமான நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில விஷயங்களில் திட்டமிட்டது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் இருக்கும். வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**கடகம்**
சகோதரர் வகையில் ஒற்றுமை பிறக்கும். கேட்ட இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். அமோகமான நாள்.

**கன்னி**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகள் குடும்பசூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**துலாம்**
எதிர்பார்த்ததில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். நண்பர்கள் உதவுவார்கள்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். சொத்துப் பிரச்னைக்கு சுமுக தீர்வு கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களை கட்டும்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். திடீர் பணவரவு உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும். அடைவார்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. சகோதரர் வகையில் மனத்தாங்கல் வரும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உடல் நலத்தில் கவனம் தேவை.

**மீனம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். மற்றவர்களின் மனநிலையை உணர்ந்து பேசும் பக்குவம் உண்டாகும். புதுதொழில் தொடங்குவீர்கள்.

# இளைஞனின் கையை முறித்த பொலிஸ்; மனிதவுரிமைகள் ஆணைக்குழு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்.26

நெல்லியடி - மந்துவில் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை தாக்கி கையை முறித்த குற்றச்சாட்டு தொடர்பில் நெல்லியடி பொலிஸாரை எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு விளக்கமளிக்க வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி பகுதியில் சிறீலங்கா ரெலிக்கொம்முக்கு சொந்தமான கேபிள் வயர்கள் அறுக்கப்பட்டமை தொடர்பில் மந்துவில் பகுதியில் வசிக்கும் இளைஞன் ஒருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கடந்த 18 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட தன்னை, பொலிஸ் காவலில் வைத்து தாக்கி கையை முறித்தார்கள் என பாதிக்கப்பட்ட இளைஞன், நேற்று முன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

இந்த நிலையில், குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமளிக்க வருமாறு நெல்லியடி பொலிஸாருக்கும் குறித்த பிரதேசத்துக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகருக்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் அழைப்புக் கட்டளை அனுப்பியுள்ளது. (எ-05)

# முல்லை.வலய கல்வி பணிப்பாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும்

## கல்விச் சேவை ஆணைக்குழு கடிதம்

முல்லைத்தீவு, பெப்.26

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் தொடர்பில் பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டை சட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப விசாரணை செய்யுமாறு வடமாகாண பிரதமர் செயலாளருக்கு எழுத்து மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

பொதுச்சேவை ஆணைக் குழு, கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு பாரப்படுத்திய நிலையில், இம்முறைப்பாட்டை ஆராய்ந்த கல்விச்சேவை ஆணைக்குழு வலுவில் உள்ள சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக தேவையான நடவடிக் கைகளை எடுப்பதற்காக வடமாகாண பிரதம செயலாளருக்கு பாரப்படுத்தியுள்ளது. (எ-05)

# உதவித் தேர்தல் ஆணையாளருக்கு யாழில் சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.26

வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ. கி. அமல்ராஜின் சேவைநலன் பாராட்டு விழா மற்றும் பிரியாவிடை நிகழ்வு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய அரசாங்க அதிபர், எமது மாவட்டத்தில் உதவித் தேர்தல் ஆணையாளர் 06 ஆண்டுகள் பணியாற்றியவர் எனவும், நிதி, நிர்வாகம் தொடர்பாக பயிற்சி வகுப்புகள் மற்றும் தடை தாண்டல் பரீட்சைகளுக்கான வகுப்புக்களை நடத்தி பல பேரின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு உதவி புரிந்துள்ளார். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 04 தேர்தல்களை நடத்தியுள்ளார் எனவும் தாம் தெரிவத்தாட்சி அலுவலகராக கடந்த ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் கடமையாற்றிய போது தம்முடன் பக்கபலமாகவிருந்து தேர்தல் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்காக தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை, மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனின் வாழ்த்துரை வழங்கப்பட்டதுடன் ஏனைய பதவிநிலை உத்தியோகத்தர்களாலும் வாழ்த்துரை நிகழ்த்தப்பட்டது.

இதன்போது, அரசாங்க அதிபர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளால் உதவித் தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ் ஜூக்கு நினைவுச்சின்னங்கள் வழங்கப்பட்டன. (எ)

# தீவுப்பகுதிக்கு விவாகப் பதிவாளர் நியமனம்

யாழ்ப்பாணம், பெப்.26

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேலணை பிரதேசத்துக்கான பிறப்பு, இறப்பு பதிவாளராகவும் தீவுப் பகுதிக்கான விவாகப் பதிவாளராகவும் குணசிங்கம் துசாந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மாவட்ட செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கினார். (எ-05)

# 'சிவராத்திரி விரத மகிமை' சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.26

மானிப்பாய் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான சிவராத்திரி தின உற்சவ நிகழ்வில் இன்று புதன்கிழமை இரவு 08.00 மணிக்கு "சிவராத்திரி விரத மகிமை" என்னும் விடயப்பொருளில் சைவப்புலவர் செ. த. குமரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா-இலங்கை பெற்றோலியக் குழாய் இணைப்பு திட்டம் சாத்தியப்படக்கூடியதா?

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் விளக்கம்

கொழும்பு, பெப். 26

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே முன்மொழியப்பட்டுள்ள பல்துறை பெற்றோலிய குழாய் இணைப்பு, அரசியல் ரீதியாக சாத்தியமானதாக இல்லாவிட்டாலும், பொருளாதார ரீதியாக சாத்தியமானதாக இருந்தால் மட்டுமே நிறைவேறும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டபிள்யூ.ஏ.ராஜகருணா தெரிவித்துள்ளார்.**

இந்த திட்டத்தின் சாத்தியக்கூறுகளை இரு தரப்பினரும் தற்போது மதிப்பீடு செய்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வாரம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-திட்டத்தின் சாத்தியக்கூறுகளை நாங்கள் மதிப்பிடுவோம். அது சாத்தியமானால் மட்டுமே முன்னேற்றம் இடம்பெறும். அரசியல் காரணங்களுக்காக அதை முடிவு செய்ய முடியாது.

இந்தியா, இலங்கை மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவற்றை உள்ளடக்கிய முத்தரப்பு திட்டமாக இது முன்மொழியப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு டிசெம்பரில் ஜனாதிபதி புதுடில்லிக்கு விஜயம் செய்தபோது இந்தத் திட்டம் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு ஆரம்பட்ட இணக்கப்பாட்டுக்கான ஒப்பந்தடம் கையெழுத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் இடையிலான எரிசக்தி இணைப்பின் ஒரு பகுதியாகும். அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான மின் கட்ட இணைப்புக்கான திட்டமும் இதன்மூலம் சாத்தியமாகும்.

இதற்கிடையில், திறந்த சந்தையில் இருந்து விலைமனுக் கோரல் செயல்முறை மூலம் எரிபொருள் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் கட்டாரில் இருந்து நேரடியாக எரிபொருள் கொள்முதல் செய்வது குறித்து இலங்கை பரிசீலித்து வருகிறது.-என்றார். (அ)

# அரசாங்கத்தின் திட்டங்களுக்கு செஞ்சிலுவைக்குழு ஒத்துழைப்பு

கொழும்பு, பெப். 26

புதிய அரசாங்கத் திட்டங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழு ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பிரதிநிதிகள் குழுவின் புதிய பிரதானி செவரின் சபாஸ்க்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கையின் புதிய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைக்குழுவின்ஆதரவை வழங்குவது குறித்து இதன் போது அவதானம் செலுத்தப்பட்டது.

அதன்படி, காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தை வலுப்படுத்த தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்கவும் திறன் மேம்பாட்டிற்காகவும் செஞ்சிலுவைக் குழு உடன்பாடு தெரிவித்தது.

காணாமல் போனவர்களைத் தேடுவதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கு இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது தெரிவித்தார்.

1989 ஆம் ஆண்டு முதல் சர்வதேச செஞ்சிலுவைக் குழு இலங்கையில் மேற்கொண்டு வரும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு பாராட்டுத் தெரிவித்த ஜனாதிபதி அதற்கு தனது நன்றியை தெரிவித்தார். (அ)

# 11 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுடன் பாதாள உலகக் குழுக்களுக்கு தொடர்பு

கொழும்பு, பெப். 26

இவ்வாண்டின் இது வரையான காலப்பகுதியில் 17 துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும், அவற்றில் 11 சம்பவங்கள் பாதாள உலக நடவடிக்கைகளுடன் தொடர்புடையவை என்றும், 6 சம்பவங்கள் தனிப்பட்ட தகராறுகள் காரணமாக நடந்தவை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

நேற்றுக் காலை பொலிஸ் ஊடகப் பிரிவில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்படி, மேற்கூறிய சம்பவங்கள் தொடர்பாக நேற்று முன் தினம் நிலவரப்படி 49 துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களும் அவர்களது ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# கணேமுல்ல சஞ்சீவவின் கொலையுடன் தொடர்புடைய பெண் இன்னும் நாட்டில்!

கொழும்பு, பெப். 26

கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் இன்னும் நாட்டில் இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க இதனைக் கூறினார்.

நாட்டிலிருந்து வெளியேறக் கூடும் என சந்தேகிக்கப்படும் அனைத்து இடங்களிலும் தற்போது விசேட பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 19ஆம் திகதி புதுக்கடை இல 05 நீதிமன்றத்தினுள் பாதாள உலகக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் பிரதான சந்தேகநபருக்கு நீர்கொழும்பு, கட்டுவெல்லேகமவில் வசிக்கும் 25 வயதுடைய இஷாரா செவ்வந்தி என்ற பெண் துப்பாக்கியை வழங்கியிருந்தார்.

சம்பவத்தை தொடர்ந்து இஷாரா தலைமறைவாகியுள்ளார்.அவரைக் கைது செய்ய பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடியுள்ளனர். (அ)

# எஞ்சியுள்ள சகல கடவுச்சீட்டுக்களை ஒரு மாதத்துக்குள் வழங்க நடவடிக்கை

கொழும்பு, பெப். 26

எஞ்சியுள்ள அனைத்து கடவுச்சீட்டுக்களையும் ஒரு மாதத்திற்குள் வழங்கி, அந்தச் செயல்முறையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டம் அமைச்சரின் தலைமையில் பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இதனைக் கூறினார்.

கடவுச்சீட்டுக்களை பெறுவதில் பொதுமக்களின் இழந்த நம்பிக்கையை மீட்டெடுக்கும் முதன்மை நோக்கத்துடன் 24 மணி நேரமும் கடவுச்சீட்டு வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள ஊழியர்களின் அர்ப்பணிப்புக்கு அவர் தனது நன்றியையும் தெரிவித்தார்.

உரிய அச்சு இயந்திரங்களைப் பெற்ற பிறகு யாழ்ப்பாணத்திலும் கடவுச்சீட்டு வழங்கும் அலுவலகம் ஒன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், பிராந்திய அலுவலகங்களில் கடவுச்சீட்டு வழங்குவது இரட்டிப்பாக்கப்படும் என்றும் குழுவின் தலைவர் மேலும் கூறினார். (அ)

# குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நாமல் ராஜபக்ஷவுக்கு அழைப்பு

கொழும்பு, பெப். 26

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவை இன்று குற்றப் புலனாய்வுப் பிரிவில் ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தில் நடத்தப்படும் விசாரணை தொடர்பாக வாக்குமூலம் பெறுவதற்காக நாமல் ராஜபக்ஷ இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார்.

எனினும், இதன்போது நாமல் ராஜபக்ஷ கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கமானது தனது குடும்பத்தின் மீது அரசியல் பழிவாங்கல்களை மேற்கொண்டு வருவதாக பல இடங்களில் நாமல் ராஜபக்ஷ தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# வறண்ட வானிலை காரணமாக மரக்கறி விளைச்சலில் பாதிப்பு

கொழும்பு, பெப். 26

நாடளாவிய ரீதியில் நிலவும் வறண்ட வானிலை காரணமாக மரக்கறி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் விளைவாக விளைச்சல் குறைந்துள்ளதாகவும் தேசிய விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மலையகத்தில் மரக்கறி விளைச்சலில் மிகப்பெரிய தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும், நீர்வழிகளில் நீர் ஓட்டம் கணிசமாகக் குறைந்துள்ளதாகவும் சங்கத்தின் தலைவர் அனுராத தென்னக்கோன் தெரிவித்தார்.

இதன்காரணமாக, கரட், லீக்ஸ் , கோவா போன்ற மரக்கறிகளின் விளைச்சல்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தாழ்நில காய்கறி விளைச்சல்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தாழ்நில விளைச்சலைப் பொறுத்தவரை தக்காளி, மிளகாய், முள்ளங்கி மற்றும் பூசணி சாகுபடி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இடைத்தரகர்கள் அதிக விலைக்கு காய்கறிகளை விற்பனை செய்வதாகவும் அவர் கூறினார். (அ)

# சிவனொளிபாதமலையில் தீ 30 ஏக்கர் காடு எரிந்து நாசம்!

கொழும்பு, பெப். 26

சிவனொளிபாத மலைப்பகுதியில் ஏற்பட்ட தீ பரவலினால் 30 ஏக்கர் காடு எரிந்து நாசமாகியுள்ளதாக வனப்பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நல்லத்தண்ணி வாழைமலைப் பகுதியில் கடந்த 23ஆம் திகதி மாலை ஏற்பட்ட காட்டுத்தீயானது சிவனொளிபாத மலை தொடர் வரை பரவியிருந்தது.

அதிக வெப்பகால நிலையினால் வேகமாக தீப்பரவல் ஏற்பட்டது.

தீயை கட்டுப்படுத்த லக்ஷபான இராணுவத்தினர், நல்லத்தண்ணி பொலிஸார் மற்றும் நல்லத்தண்ணி வனப்பாது காப்பு அதிகாரிகளும் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் தீயை கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்நிலையில் நேற்று முன் தினம் மவுசாகலை நீர்தேக்கத்தில் நீரை பெற்று 11 தடவைகள் தீப்பரவல் பகுதிக்கு வானிலிருந்து பாய்ச்சிய நிலையில் காட்டுத் தீ கட்டுப்படுத்தப்பட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக ஹற்றன் வனப்பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.மேலும், மலையகத்தில் தொடர்ந்து கடும் வெப்ப கால நிலை காணப்படுவதனால் இனம் தெரியாதோரால் தீ வைக்கும் செயல் இடம்பெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் இல்லாது ஐ.தே.கவுடன் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டு!

**ராஜித சேனாரத்ன தகவல்**

கொழும்பு, பெப். 26

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை விட்டுவிட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் ஏராளமான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பார்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

"ஐக்கிய மக்கள் சக்தியில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைக்க விரும்பும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர், அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரை கைவிட்டு கூட்டணியில் சேர வாய்ப்புள்ளது. சஜித் பிரேமதாஸ கூட்டணியில் ஆர்வம் காட்டவில்லை போல் தெரிகிறது." எனவும் ராஜித சேனாரத்ன கூறினார்.

ராஜித சேனாரத்னவின் கருத்துக்கு பதிலளித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, சஜித் பிரேமதாஸ ஒரு போதும் ஐக்கிய தேசியக் கட்சி யுடனான பேச்சை நிறுத்த விரும் பவில்லை என்று கூறியுள்ளார். (அ)

# மருத்துவர்களின் கொடுப்பனவுகள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடல்!

கொழும்பு, பெப். 26

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் நாளை வியாழக்கிழமை கலந்துரையாடலொன்றை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாதீட்டினூடாக மருத்துவர்களின் கொடுப்பனவுகள் மற்றும் விடுமுறைகளைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை தொடர்பில் இதன்போது கலந்துரையாடவுள்ளதாக அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

வைத்தியர்கள் தமது கடமை நேரத்துக்கு மேலதிகமாக பணிபுரியவில்லையாயின், நாட்டில் மருத்துவ சேவைகளைப் பராமரிப்பது சாத்தியமற்றதாகும் என அவர் குறிப்பிட்டார்.

தற்போதும் வைத்தியர்களுக்கு பணிக்கு ஏற்ற போதுமான கொடுப்பனவு வழங்கப்படுவதில்லை எனவும் இது குறித்து ஜனாதிபதியுடன் கலந்துரையாட உள்ளதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க கூறினார். (அ)

# தரம்-1, தரம்- 6 வகுப்புகளின் பாடத் திட்டங்களில் மாற்றம்

கொழும்பு, பெப். 26

தரம் ஒன்று மற்றும் தரம் 6 இற்கான பாடத்திட்டங்களின் உள்ளடக்கங்களில் மாற்றம் செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துரைக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்த வேலைத் திட்டத்தினை 2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் பிரதமர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அதேநேரம் ஏனைய தரங்களில் பயிலும் மாணவர்களுக்கான கல்விச் சுமைகளைக் குறைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

பரீட்சை முறைமைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

பாடத்திட்டத்தின் உள்ளடக்கங்களில் மாத்திரம் மாற்றங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

தற்போதைய பாடத்திட்ட உள்ளடக்கங்களானது, 21 ஆம் நூற்றாண்டுக்குப் பொருத்தமானதாக அமைந்திருந்தாலும், சில விடயங்கள் தொடர்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சி போதுமானதாக இல்லை.

இதன் காரணமாக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது.

இதனை நிவர்த்திக்கும் வகையில் எதிர்காலத்தில் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளை வழங்கும் வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (அ)

# குறைந்த வருமானம் பெறுவோருக்கு புத்தாண்டை ஒட்டி நிவாரணப் பொதி!

கொழும்பு, பெப். 26

எதிர்வரும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதியொன்றை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

உணவு பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பான கொள்கை முடிவுகளை எடுப்பதற்காக விவசாய கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த மற்றும் வர்த்தகம், வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க மற்றும் உணவுக் கொள்கை மற்றும் உணவு பாதுகாப்புக் குழு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் மூன்றாவது முறையாக பாராளுமன்ற வளாகத்தில் கூடியபோது, இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதில் சிங்கள, தமிழ் புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மற்றும் அந்தப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்பன குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பண்டிகைக் காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மானிய விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க ஒரு பில்லியன் ரூபா ஒதுக்க முன்மொழியப்பட்டுள்ளதோடு இது குறித்து இங்கு விரிவாக ஆராயப்பட்டது.

சந்தையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களை குறைந்தபட்ச அளவில் பராமரிப்பது மற்றும் பேக்கரி பொருட்களின் விலைகளைக் குறைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நெல் கொள்முதல் குறித்தும் இங்கு ஆராயப்பட்டதோடு நெல் கொள்வனவு செய்வதற்காக அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் கடன் வசதிகளின் கீழ் வாங்கப்படும் நெல்லின் அளவைக் கண்காணிப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் சில நெல் ஆலை உரிமையாளர்கள் நெல் வாங்குவதற்காக பெற்ற கடன்களை வேறு நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதாக தகவல் கிடைத்துள்ளதோடு இது குறித்து ஆராய்வதற்கு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பாரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் நெல் வாங்குவதற்காக 15 பில்லியன் ரூபாய்க்கு மேல் வங்கிக் கடன்களைப் பெற்றுள்ளதாகத் இங்கு தகவல் வெளியானது.

எனவே, இந்த ஆண்டு 250,000 மெட்ரிக் டொன் நெல் கொள்வனவு செய்ய அரசாங்கம் எதிர்பார்ப்பதோடு சிறு நெல் ஆலை உரிமையாளர்கள் நெல் கொள்வனவு செய்வதை ஊக்குவிப்பது குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

மீண்டும் அரிசி பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாறும் இதன்போது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

மானிய விலையில் நுகர்வோருக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்காக கூட்டுறவு மற்றும் சதோச வலையமைப்பை விரிவுபடுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. விலைக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் நுகர்வோருக்கு உகந்த சந்தையை உருவாக்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதில் பிரதமரின் செயலாளர் ஜி.பி. சபுதந்திரி, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் அடங்கிய உணவுக் கொள்கை மற்றும் உணவு பாதுகாப்புக் குழுவின் உறுப்பினர்கள் இந்தக் கலந்து ரையாடலில் கலந்து கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பொலனறுவை அரிசி ஆலை தொடர்பில் அரசு விசாரணை

கொழும்பு, பெப். 26

பொலனறுவையில் அமைந்துள்ள அரிசி ஆலை ஒன்று தொடர்பில் அரசாங்கம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரிசி ஆலையில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையை விட அதிகமான விலைக்கு அரிசியை விற்பனை செய்வதாகக் கூறிய அவர், இது தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

குறித்த அரிசி ஆலைக்கு அரசாங்கம் 15 பில்லியன் கடனை வழங்கியதாகவும், அந்தக் கடனைப் பயன்படுத்தி விவசாயியிடமிருந்து அரிசியைப் பெற்று இவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

# கெஹலியவின் சொத்து தொடர்பான ஆவணப் பிரதிகளை வழங்க உத்தரவு!

கொழும்பு, பெப். 26

கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைப்பற்றப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களின் சொத்துகள் தொடர்பான அசல் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை அவர் களுக்கு வழங்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட் டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாக, அவர்களின் வங்கிக் கணக்குகள், ஆயுள் காப்பீடு போன்றவற்றை முடக்குவதற்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் முன்னதாக உத்தரவுகளைப் பிறப்பித்திருந்தது. எனினும், இது தொடர்பாக கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் சார்பாக நேற்று மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தரவுகளால் முடக்கப்பட்டுள்ள தங்கள் தரப்பினர்களுக்கு அவர்களது சொத்துகள் தொடர்பான அசல் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே, அசல் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை விண்ணப்பதாரர்களுக்கு வழங்குமாறு உத்தர விட்டார். (அ)

# மின் கட்டணத்தை குறைப்பதாக கூறிவிட்டு மீண்டும் ஏன் அதிகரிக்க எண்ணுகின்றீர்கள்?

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி**

கொழும்பு, பெப். 26

மின்சாரக் கட்டணத்தை 1ஃ3 குறைப்பதாகக் கூறிவிட்டு, ஏன் மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிக்கப் பார்க்கிறீர்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ரூ. 9000 மின்சார கட்டணத்தை ரூ. 6000 ஆகவும், ரூ.3000 மின்சார கட்டணத்தை ரூ. 2000 ஆக அமையும் விதமாக மின்சாரக் கட்டணத்தை 1ஃ3 ஆக குறைப்போம் என்று தேர்தல் காலத்தில் ஆளுந்தரப்பினர் தெரிவித்தனர். மக்கள் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்ததன் பிரகாரம், மின்சார கட்டணம் சராசரியாக 20 வீதம் குறைக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்கத்தக்கதாக விரைவில் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் என மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். மின் கட்டண சூத்திரத்தை மக்கள் சார்பானதாக மாற்றிய மைப்போம் என தெரிவித்திருந் தனர்.

எதிர்காலத்தில் மின்கட்டணம் அதிகரிக்கப்படும் என அறிவிப்பை விடுவதில் பிரச்னை எழுந்துள்ளது.



இவ்வாறு மின்கட்டணம் மேலும் அதிகரிக்கும் போது இது புதிய முதலீடுகளுக்கும் பொதுமக்களும் பாதிப்பை ஏற்படுத்தும். இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு கோரிக்கை விடுக்கின்றேன்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வறட்சியால் பெரிதும் பாதிப்பு!

## பல பகுதிகளில் குடிதண்ணீர் நெருக்கடி

கொழும்பு, பெப். 26

**நாடு முழுவதும் நிலவும் வெப்பமான காலநிலையால், பல பகுதிகளில் மக்கள் தற்போது குடிநீர் நெருக்கடியை எதிர் கொண்டுள்ளனர்.**

அதற்கமைய, இரண்டாயிரத்து 278 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மற்றும் களுத்துறை மாவட்டங்களிலேயே மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பகுதிகளில் தாங்கி ஊர்திகளைப் பயன்படுத்தி மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், வறண்ட காலநிலை காரணமாகக் காட்டுத் தீ ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அவதானம் செலுத்தும் வகையில் நேற்று முன் தினம் முதல் மார்ச் 2 ஆம் திகதி வரை "தீப்பரல் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படு த்தப்பட்டுள்ளது.

தீ அனர்த்தங்கள் ஏற்பட்டவுடன் அவற்றை அணைப்பது கடினம் என்பதையும், அத்தகைய அனர்த்தங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் சேதத்தை மீட்டெடுக்க முடியாது என்பதையும் பொதுமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என வனவள பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

இதன் விளைவாக, இந்த நிலைமை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் தீப்பர வல் கட்டுப்பாட்டு வாரம் பிரகடனப்படு த்தப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 5 மாகாணங்களை உள்ளடக்கி சைபர் குற்ற புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, பெப். 26

தற்போது இலங்கை பொலிஸ் 5 மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவுகளை அமைத்துள்ளதாக கட்டான பொலிஸ் பயிற்சி நிறுவனத்தின் பிரதான நிர்வாக அதிகாரியான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஷாந்த சந்திரசேகர தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர், ஏனைய மாகாணங்களையும் சேர்த்து மொத்தம் 9 மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் இது தொடர்பான நடவடிக்கைகள் முழுமையாக மேற்கொள்ளப்படுவதாக கூறினார்.

அதேபோல், தற்போது பொலிஸ் தொழில்நுட்ப ரீதியாக மிகவும் வலுவான நிலையில் உள்ளதாகவும், அதன்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கீழ் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன் கீழ் சைபர் குற்ற விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அதற்கு மேலதிகமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினுள், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவு ஒன்று இயங்குவதாகவும் அவர் கூறினார்.

மேலும், 5 மாகாணங்களை உள்ளடக்கும் வகையில் அம்பாறை, குருநாகல், மாத்தறை, கண்டி ஆகிய இடங்களில் பிராந்திய மட்டத்தில் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித் தார். (அ)

# கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் ஐஸ் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, பெப். 26

கூரிய ஆயுதத்தால் ஒருவரை தாக்கிக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கொட்டாஞ்சேனையில் ஐஸ் போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப் பட்ட்டுள்ளனர்.

கொட்டாஞ்சேனை பொலிஸ் பிரிவின் புளூமெண்டல் ரயில் பாதைக்கு அருகில் நேற்று முன் தினம் பொலிஸ் அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது, 12 கிராம் 400 மில்லி கிராம் மற்றும் 10 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் ரக போதைப் பொருள் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், புளூமெண்டல் மற்றும் கொச்சிக்கடை பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 31 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

மேலும், சந்தேகநபர்கள் மீது மேற்கொண்ட விசாரணையில், கடந்த 18ஆம் திகதி இரவு புளூமெண்டல் ரயில் பாதைக்கு அருகில் கூரிய ஆயுதத்தால் ஒருவரை தாக்கிக் கொலை செய்த சம்பவத்துடன் அவர்கள் தொடர்புடையவர்கள் என்பதும் தெரியவந்துள்ளது. (அ)

# ஐ.நா. நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சஜித் பிரேமதாஸவுடன் சந்திப்பு!

கொழும்பு, பெப். 26

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிரெஞ் மற்றும் சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கான ஆலோசகர் பற்றிக் மக் கார்தே ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

நாட்டின் பல்வேறு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது இரு தரப்பினரும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

அதேநேரம், இந்த சந்திப்பின்போது தற்போதைய வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கத் தேவையான ஆதரவை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைப் பிரதிநிதிகளிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார். (அ)

# கணேமுல்ல சஞ்சீவவின் கொலையுடன் பதில் பொலிஸ்மா அதிபருக்கு தொடர்பா?

## உதய கம்மன்பில கேள்வி

கொழும்பு, பெப். 26

கணேமுல்ல சஞ்சீவ கொலையுடன் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கும் தொடர்பிருக்கின்றதா என்ற சந்தேகம் எழுகிறது. எனவே தகவல் கிடைத்திருந்தும் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறி பதில் பொலிஸ்மா அதிபர் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரவி செனவிரத்ன நடவடிக்கை எடுப்பாரா என பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில கேள்வியெழுப்பினார்.

பிவிதுரு ஹெல உருமய அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு கேள்வியெழுப் பினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-கணேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதற்கு முதல் வாரம் கம்பஹா நீதிமன்றத்தில் அவர் முன்னிலைப் படுத்தப்படவிருந்தபோது அவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்படவிருந்ததாக தனக்கு தகவலொன்று கிடைத்ததாக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அதன் காரணமாக அன்றைய தினம் மெய்நிகர் ஊடாக அவரை வழக்கு விசாரணைகளில் முன்னிலைப்படுத்தியதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். கம்பஹா நீதிமன்றத்தில் சஞ்சீவ மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்ப டவிருந்தமைக்கான காரணம் அந்த நீதிமன்றத்தின் மீதுள்ள கோபத்தால் அல்ல, சஞ்சீவ மீதிருந்த கோபத்தினாலாகும்.

கம்பஹா நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்படவிருந்த தாக்குதலுக்கான சந்தர்ப்பத்தை பொலிஸார் தடுத்துள்ளனர் என்பதால், அதனை கொழும்பு நீதிமன்றத்தில் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கலாம் என்பதை ஊகிப்பதற்கு பெரும் புலமை தேவையில்லை. ஆனால் தகவல் கிடைத்திருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காத பதில் பொலிஸ்மா அதிபர், கணேமுல்ல சஞ்சீவ கொல்லப்படுவதற்கு இடமளித்துவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்திருக்கின்றார்.

கொழும்பிலும் சஞ்சீவ மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என பதில் பொலிஸ்மா அதிபர் சிந்திக்காமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. சஞ்சீவ மீது இலக்கு வைத்தவர்கள் கைது செய்யப்படும் வரை அவருக்கான அச்சுறுத்தல் நீங்கவில்லை என்பதையும் பதில் பொலிஸ்மா அறிந்திருப்பார். அந்த வகையில் இந்தக் கொலையில் பதில் பொலிஸ்மா அதிபருக்கும் தொடர்பிருக்கலாம் என்ற நியாயமான சந்தேகம் எமக்கு ஏற்படுகிறது.

அவ்வாறெனில் பதில் பொலிஸ்மா அதிபர் மீது யார் நடவடிக்கை எடுப்பது? பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்னவுக்கே அந்த அதிகாரம் காணப்படுகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் 12 நாட்களுக்கு முன்னரே தகவல் கிடைத்திருந்தும் நடவடிக்கை எடுக்கத் தவறிய ரவி செனவிரத்னவுக்கே இந்த பொறுப்பு காணப்படுகிறது. இவர் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியிலிருக்கும் வரை புலனாய்வு தகவல்கள் கிடைத்தாலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காமலிருக்கும் நோய் ஒருபோதும் குணமடையப் போவதில்லை- என்றார். (அ)

# 7 கோள்களும் ஒரே அணி வகுப்பில் இலங்கையருக்கு அரிய சந்தர்ப்பம்!

கொழும்பு, பெப். 26

இன்றைய நாட்களில் சூரிய குடும்பத்தின் 7 கோள்கள் நேராக அணிவகுக்கும் அரிதான காட்சியை பார்வையிட முடியுமென கொழும்பு பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

நேற்று முதல் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை சூரிய அஸ்தமனத்தின் பின்னர் இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வை இலங்கையர்கள் பார்க்க முடியும் என கொழும்பு, பல்கலைக்கழகத்தின் விண்வெளி அறிவியல் பிரிவின் பேராசிரியர் சந்தன ஜயரத்ன குறிப்பிட்டார்.

பூமியைத் தவிர சூரியக் குடும்பத்தின் அனைத்துக் கோள்களும் இந்தக் காலகட்டத்தில் பொதுவான பாதையில் செல்வதைக் காணலாம் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இந்த கட்சியின்போது, புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய கோள்களை வெற்றுக்கண்களால் அவதானிக்கக் கூடியவாறு பிரகாசமாக தென்படும்.

எனினும், நெப்டியூன், யுரேனஸ் ஆகிய கோள்களை தொலைநோக்கியினுடாக



பார்வையிடுவதற்கும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.2025 ஓகஸ்ட் மாதம், சூரி யன் உதிக்கும் முன் நான்கு கிர கங்கள் ஒரே நேரத்தில் தெரியும் போது மற்றொரு கோள்கள் அணிவகுப்பு உருவாகும் என்றும் ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். (அ)

# கணேமுல்ல சஞ்சீவவின் கொலை மேலும் இரு சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, பெப். 26

கணேமுல்ல சஞ்சீவவின் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய இரு சந்தேக நபர்கள் கொழும்பு குற்றப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொலை சம்பவம் தொடர்பான தகவல்களை மறைத்தமை, அதற்கு உதவி செய்த குற்றச்சாட்டு என்பவற்றின் அடிப்படையில் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு, கட்டுவெல்லேகம பகுதியைச் சேர்ந்த 23 வயதான பிங்புர தேவகே சமிது திவங்க மற்றும் 48 வயதான சேசத்புர தேவகே சமந்தி ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் குற்றத்துக்கு உதவிய முக்கிய சந்தேக நபரான இஷாரா செவ்வந்தி என்ற பெண்ணின் தாயார் மற்றும் தம்பி என்பதும் தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதாகத் தெரிவித்து இதுவரை 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்பொழுதும் மக்களுடன் இணைந்து பயணிப்போம்

## தமிழ் அரசு கட்சியின் சிறிநாத் எம். பி. உறுதி

மட்டக்களப்பு, பெப்.26

**"தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் அரசாங்கம் கூட எதிர் காலத்தில் எப்படியும் மாறலாம். ஆனால், இலங்கைத் தமிழ் அரசு கட்சி எப்பொழுதும் தமிழ் மக்களுடன் தொடர்ந்து பயணிக் கும் என்பதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை"- இவ்வாறு அந்தக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளையதம்பி சிறிநாத் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு செங்கலடி பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட ஈரளக்குளம் மற்றும் வட்டவான் போன்ற பகுதி களில் நேற்று முன்தினம் மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் கூறுகையில், "தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் தொடர்பில் எந்தவொரு நல்ல அபிப்பிராயங்களும் இல்லை என்பது உண்மை.

தேசிய மக்கள் சக்தியில் தலைமைப் பீடத்தின் கதையை கேட்டே அவர்கள் செயல்பட வேண்டும் என்ற ஒரு நிலைப் பாடு உள்ளது.

ஆனால், தமிழ் மக்களின் குரலாய், தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படும் போது போராட்டங்கள் மூலமும் பாராளுமன்றத்திலும் எதி ரொலிக்க எம்மால் மட்டுமே முடியும்.

கடந்த காலங்களில் இருந்த அமைச்சர்களே பெரும்பாலான ஊழல்களை செய்திருந்தார்கள். தற்போது, மக்கள் அவர்களுக்கு நல்ல பாடத்தை புகட்டியுள் ளனர்"- என்றார். (எ)

# இல்ல விளையாட்டு கொடிகள் வெளியீடு




காரைதீவு, பெப்.26

அம்பாறை, காரைதீவு கண்ணகி இந்து வித்தியாலய 65 வருட கால வரலாற்றில், முதல் தடவையாக இல்ல விளையாட் டுப் போட்டி விரைவில் நடைபெறவுள்ளது.

இதனையொட்டி, விளையாட்டுக் கொடிகளை வெளியிடும் நிகழ்வு நேற்றுக் காலை பாடசாலை அதிபர் சீ. திருக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளரும் அட்டாளைச் சேனை தேசிய கல்விக் கல்லூரி வருகைதரு விரிவுரையாள ருமான வி. ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.(எ)

# செட்டிப்பாளையத்தில் சிவராத்திரி பெருவிழா

மட்டக்களப்பு, பெப்.26

அண்மையில் மகா கும்பாபி ஷேகம் கண்ட மட்டக்களப்பு, செட்டிப்பாளையம் சிவன் ஆலயத்தில் இன்று புதன்கி ழமை மகா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது.

இன்று காலை 06.00 மணிக்கு 1008 சங்காபிஷேக விசேட பூசை ஆரம்பிப்பதோடு காலை 07.30 மணிக்கு மற்றும் நண்பகல் ஒரு மணிக்கு நித்திய பூஜைகளும்மாலை 06.00 மணிக்கு முதலாம் சாம பூசையும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் நடைபெற வுள்ளன. (எ)




கல்முனை, நற்பிட்டிமுனை அல் - அக்ஸா மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி லீடர் அஷ்ரப் மைதானத்தில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்றது. அதிபர் எம். எல். பதியூதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம். எச். எம். ஜாபீர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

# சமுர்த்தி திட்டம் தொடர்பில் விசேட தெளிவூட்டல் நிகழ்வு



திருகோணமலை, பெப்.26

மாவட்ட மட்டத்தில் கட மையாற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அதிகாரிக ளுக்கு சமுர்த்தி சமூக வலுவூட் டல் திட்டம் தொடர்பான விசேட தெளிவூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் திருகோண மலை மாவட்ட அரசாங்க அதி பர் டபிள்யூ. ஜி. எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத் தில் நடைபெற்றது.

தங்கி வாழும் மனநிலையிலி ருந்து விலகி சுதந்திரமான பிர ஜைகள் சமூகம் ஒன்றைக் கட்டி யெழுப்பும் பொருட்டு மக் களை வலுவூட்டுவது அத்தியா வசியமானதாகும். மக்களிடத் தேயிருந்து கட்டியெழுப்பப்ப டுகின்ற பலத்தை அடிப்படை யாகக் கொண்டு ஜவகை வலு வூட்டல் வேலைத் திட்டத்தின் ஊடாக நாட்டின் அனைத்து பிரஜையையும் தேசிய பொரு ளாதாரத்தின் பேரபிமானமுள்ள பங்காளர் ஒருவராக உருவாக்கு வதே இந்த வேலைத் திட்டத் தின் முக்கிய குறிக்கோளாகும்.

இதன்போது, தமிழ் மொழி யில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் திருமதி. ஏ. பாக்கியராஜா மற்றும் சிங் கள மொழியில் சமூக பாது காப்பு மற்றும் நலம்புரி பணிப் பாளர் எச். கே. ரணவீர ஆகி யோர் வளவாளர்களாக பங்கேற் றனர்.

கடந்த காலத்தில் செயல்ப டுத்தப்பட்ட முக்கிய நலத்திட் டங்கள், வாழ்வாதார மேம் பாடு, நிதி உள்ளடக்கம், உள சமூக ரீதியான உயிர்ப்பூட் டல்கள், சமூக பாதுகாப்பு, பயிற்சியும் வழிகாட்டல்களும், பயனாளிகளை தெரிவு செய் தல், இலக்குகள், ஒழுங்குமுறை, தரவு சேகரிக்கும் முறை, பங்கு தாரர்கள், கண்காணிப்பு, படிநி லைகள், முன்னேற்ற மேலாய்வு போன்ற பல விடயங்கள் இதன் போது தெளிவூட்டப்பட்டன.

இதில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர்கள், மாவட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் பிரதேச செயலாளர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண் டனர்.(எ)

மாற்றுத்திறனாளிகளுக்கான

# தொழில் நிலையம் வெருகலில் திறப்பு



வெருகல், பெப்.26

திருகோணமலை -வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாற்றுத்திறனாளி பெண்களை தொழில் ரீதியாக முன்னேற்று வதற்கான துணி பை தயாரிக் கும் நிலையம் நேற்று முன்தி னம் வெருகலில் திறந்து வைக் கப்பட்டது.

வை. எம். சி. ஏ. அமைப்பு தெரிவு செய்யப்பட்ட பயனாளி களுக்கு பொலித்தீன் பாவ னையை தடைசெய்து துணி மூலம் பைகளை தயாரிக்கும் ஒருமாத கால பயிற்சியை வழங்கி பின்னர் வெருகல் பிர தேசத்தில் இந்த பயிற்சி நிலை யத்தை திறந்து வைத்துள்ளது.

தொழில் ரீதியாக மாற்றுத் திறனாளிகளை ஊக்குவிக்கும் நோக்கில் இந்தத் திட்டம் ஆரம் பித்து வைக்கப்பட் டுள்ளது.

இந்த நிகழ்வில் வெருகல் பிரதேச செயலக உத்தியோகத் தர்கள், வை. எம். சி. ஏ. அமைப் பின் உத்தியோகத்தர் கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# அட்டாளைச்சேனையில் கலைஞர்கள் கௌரவிப்பு



கல்முனை, பெப்.26

கலாசார அலுவல்கள் திணைக்களம் அம்பாறை மாவட்டம் அட்டாளைச் சேனை பிரதேச செயலகத் துடன் இணைந்து ஏற்பாடு செய்த பிரதேச இலக்கிய விழா அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸப்பிர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது கலைஞர்கள், எழுத்தா ளர்கள், துறைசார் முக்கியஸ் தர்கள் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எஸ். றஜாயாவின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலாசார அபிவிருத்தி உத்தி யோகத்தர்களான எம். எஸ். ஜபர், எம். அஷ்ரப் ஆகியோர் துறைசார் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதன்போது, அட்டாளைச் சேனை பிரதேச மட்டத்தில் நடத்தப்பட்ட இலக்கிய போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை உள் ளிட்ட பிரதேசங்களைச் சேரந்த கலைஞர்கள் மற்றும் மாணவர் கள் போன்றோருக்கு பரிசில்க ளும் சான்றிதழ்களும் வழங்கப் பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனிலிருந்து ரஷ்ய படைகளை திரும்பப்பெற வலியுறுத்தி தீர்மானம்

## ஐ. நாவில் நிறைவேற்றம்; இந்தியா புறக்கணிப்பு

ஜெனிவா, பெப். 26

**உக்ரைனிலிருந்து ரஷ்ய படைகளை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தி ஐ. நாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை இந்தியா புறக்கணித்துள்ளது.**

193 நாடுகள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில் 93 நாடுகள் ஆதரவாகவும், 18 நாடுகள் எதிராகவும் வாக்களித்தன.

இந்திய உட்பட 65 நாடு கள் வாக்கெடுப்பை புறக்கணித்தன.

கடந்த முறை ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது 140இற்கும் அதிகமான நாடுகள் ஆதரவாக வாக்களித்த நிலையில் தற்போது வெறும் 93 நாடுகளே ரஷ்யாவுக்கு எதிராக வாக்களித்துள்ளன.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் - ரஷ்யா இடையே கடந்த 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி போர் ஆரம்பித்தது.

உக்ரைன் மீது வான் வழி மற்றும் தரைவழித் தாக் குதலை ரஷ்யா தொடங்கியது. இந்தப் போர் தொடங்கி நேற்று முன்தினத்துடன் மூன்றாண்டுகள் நிறைவடைந்தன.

இந்த நிலையில் தான் உக்ரைனிலிருந்து ரஷ்ய படைகளை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தி நேற்று ஐ. நாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ரஷ்யா - உக்ரைன் இடையே போர் பதற்றத்தைக் குறைக்கவும், அமைதியான முறையில் பிரச்னையை தீர்க்கவும் வலியுறுத்தி இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. (ஏ)

# கூட்டத்தில் வாக்குவாதம் அமைச்சர் இராஜினாமா!

வெலிங்டன், பெப்.26



நியூசிலாந்தின் வர்த்தகத் துறை அமைச்சர் ஆண்ட்ரூ பேலி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அங்கு தேசியவாத கட்சி தலைமையிலான ஆட்சி நடைபெறுகிறது. வர்த்தகத் துறை அமைச்சராக ஆண்ட்ரூ பேலி பதவி வகித்து வந்தார். கடந்த ஒக்ரோபர் மாதம் தலைநகர் வெலிங்டனில் வணிகர்களுக்கான மாநாடு ஒன்று நடைபெற்றது. இதில், கலந்து கொண்ட ஆண்ட்ரூ பேலி வணிகர்களுடன் உரையாடினார்.

அப்போது, கூட்டத் திலிருந்த நபர் ஒருவருக்கும் அமைச் சருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. இதனால், ஆத்திரமடைந்த ஆண்ட்ரூ, அந்த நபரை அவதூறாக விமர் சித்தார். அவரது இந்த செய லுக்கு கடும் எதிர்ப்புகள் கிளம் பின. இதனையடுத்து அமைச்சர் பகிரங்க மன்னிப்புக் கோரினார்.

எனினும், எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அவரை விமர்சித்து வந்தன. இந்த நிலையில் நேற்று ஆண்ட்ரூ பேலி தனது அமைச்சர் பத வியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். (ஏ)

# ஜனாதிபதி பதவியை விட்டு விலகத் தயார்!

## ஜெலன்ஸ்கி அறிவிப்பு

கீவ், பெப்.26

உக்ரைனுக்கு நேட்டோ உறுப்பினர் பதவி கொடுத்தால் நான் ஜனாதிபதி பதவியை விட்டு விலகத் தயாராகவே இருக்கிறேன் என்று ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் கடந்த 3 ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயற்சித்து வருகிறார். இதற்கிடையே, "உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சர்வாதிகாரிபோல் செயல்படுகிறார். இவர் போர் நிறுத்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாக விட மாட்டார் என ட்ரம்ப் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் கீவ் நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் ஜெலன்ஸ்கி கூறுகையில், "உக்ரைனில் அமைதி நிலவ வேண்டும் என்றால் எனது பதவியை விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கிறேன். உக்ரைனுக்கு நேட்டோ உறுப்பினர் பதவி வழங்கப்பட வேண்டும். ரஷ்யாவின் முழுமையான படையெடுப்புக்கு எதிராக உக்ரைனுக்கு ட்ரம்ப் பாதுகாப்பு வழங்க வேண்டும். அமெரிக்காவின் பாதுகாப்பு உத்தரவாதங்கள் மிகவும் அவசியம். உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையே ட்ரம்ப் மத்தியஸ்தராக இருக்க வேண்டும்"- என்றார். (ஏ)

# ஜேர்மனி பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சி படுதோல்வி

## புதிய பிரதமராக பிரைடுரிச் தெரிவு



பெர்லின், பெப்.26

ஜேர்மனியில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியான ஜனநாயக சமூகம் படுதோல்வியடைந்தது.

இதேவேளை, பிரதமர் ஒலாப் ஷோல்ஸ் தோல்வியடைந்ததை நேற்று முன்தினம் வெளியான முதல்கட்ட வாக்கு எண்ணிக்கை முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. ஆளுங் கட்சியான ஜனநாயக சமூகம் கட்சியால் 16 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற முடிந்துள்ளது.

ஜேர்மனியில் எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் - சி.எஸ்.யு. தலைமையிலான அணி 28. 5 சதவிகித வாக்குக ளைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

இதனையடுத்து, ஜேர்மனியின் புதிய பிரதமராக பிரைடுரிச் மெர்ஸ் ஒருமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் விரைவில் பதவியேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஏ)

# "இடதுசாரி கொள்கை நிராகரிப்பு"

வாஷிங்டன், பெப்.26



ஜேர்மனி பாராளுமன்றத் தேர்தலில் வலதுசாரி கூட்டணி வெற்றி பெற்றதை வரவேற்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இடதுசாரி கொள்கையை மக்கள் நிராகரித்துவிட்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் கடந்த 23ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது.

அங்கு மொத் தம் 630 இடங்கள் உள்ளன. இதில், வலதுசாரி கூட்டணி அதிக இடங்களில் (208) வெற்றி பெற்றிருந்தாலும் ஆட்சிய மைக்க 316 உறுப்பினர்க ளின் ஆதரவு தேவை. எனவே, பிற கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தையை தொடங் கியுள்ளது.

இதனால், புதிய அரசு அமைவது தாமதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜேர்மனி தேர்தல் முடிவுகள் குறித்து ட்ரம்ப் சமூக வலைத் தளப் பக்கத்தில், "அமெரிக்காவைப் போலவே, ஜேர்மனி மக்களும் பல ஆண்டுகளாக நிலவி வரும் பொது அறிவு இல்லாத அந்த நாட்டு அரசின் நடவடிக்கைகளால் சோர்வடைந்திருந்தனர். குறிப்பாக எரிசக்தி மற்றும் குடியேற்றம் உள்ளிட்ட விவகாரங்களில் அதிருப்தியடைந்திருந்தனர்.

இந்த நிலை யில், வலதுசாரி கூட்டணி வெற்றி பெற்றிருப்பது வரவேற்கத்தக்கது. ஓலாப் ஸ்கால்ஸ் தலைமையிலான இடதுசாரி அரசின் கொள்கையை மக்கள் நிராகரித்துள்ளனர். இது ஜேர்மனிக்கு ஒரு மகத்தான நாள்"- என்று குறிப் பிட்டுள்ளார். (ஏ)

# 1,600 அரசு ஊழியர்கள் பணிநீக்கம்

வாஷிங்டன், பெப்.26

அமெரிக்காவில் 1,600 அரசு ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த மாதம் பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், பல்வேறு முக்கிய திருத்தங்களை மேற் கொண்டு வருகிறார்.

இந்த நிலையில், அமெரிக் காவின் சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்தில் பணிபுரிந்த 1,600 ஊழியர் களை பணிநீக்கம் செய் வதாக ட்ரம்ப் நிர்வாகம் அறி வித்துள்ளது. மேலும், பல்வேறு நாடுகளில் பணிபுரியும் 4,500 இற்கும் மேற்பட்ட சர்வதேச மேம்பாட்டு நிறுவன ஊழியர்களை ஊதியத் துடன் கூடிய கட்டாய விடுப்பில் அனுப்பி உத்த ரவு பிறப்பிக்கப்பட் டுள் ளது. (ஏ)

# விமானப்படைத் தளம்மீது பங்களாதேஷில் தாக்குதல்

டாக்கா, பெப்.26

பங்களாதேஷில் விமானப்படைத் தளம்மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சமிதிபரா பகுதியிலுள்ள காக்ஸ் பஜார் விமானப்படைத் தளம் மீதே நேற்று முன்தினம் மாலை இந்தத் துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தப்பட்டது.

இதையடுத்து விமானப்படைத் தளத்திலிருந்த படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

தாக்குதலில் ஈடுபட்டவர் களை பிடிக்க கூடுதல் படைகள் அமைக்கப் பட் டுள்ளதாக பங்களாதேஷ் இராணுவம் தெரிவித்துள்ளது. (ஏ)

# ரஷ்ய தூதரகத்தில் குண்டுவெடிப்பு!

பாரிஸ், பெப்.26

பிரான்ஸ், மார்சே நகரிலுள்ள ரஷ்ய தூதரகத்தில் நேற்றுக் காலை குண்டு வெடித்தது.

தூதரக பூந்தோட்ட பகுதியில் மர்ம நபர்கள் சிலர் 2 குண் டுகளை வீசி சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந் தப் பகுதியில், கார் ஒன்று நின் றிருந்தது. அது வேறொரு பகு தியிலிருந்து திருடப்பட்டது என விசாரணையில் தெரிய வந்துள்ளது.

எனினும், இந்த குண்டுவெ டிப்பு சம்பவத்தில் யாருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இதுபற்றி ரஷ்ய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர் பாளர் மரியா ஜகரோவா கூறு கையில், "மார்சே நகரில் ரஷ்ய தூதரகத்தின் மீது நடந்த குண் டுவெடிப்பு சம்பவம் பயங்கர வாதத் தாக்குதலின் அறிகுறி களாகும்.

இதுபற்றி பிரான்ஸ் உடனடியாக, முழு அளவிலான விசாரணை மேற்கொள்ள வேண் டும். ரஷ்ய அமைப்புக்களின் பாதுகாப்பை மேம்படுத்து வதற்கான நடவடிக்கை களையும் உடனடியாக எடுக்க வேண் டும்"- என்றார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 விக்கெட் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி




ராவல்பிண்டி, பெப்.26

பங்களாதேஷுக்கு எதிரான போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான், ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் இந்தப் போட்டி நடைபெற்றது. 6ஆவது லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதின. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழந்து 236 ஓட்டங்கள் எடுத்தது.

அந்த அணி தரப்பில் அதிகபட்சமாக அணித் தலைவர் ஷாண்டோ 77 ஓட்டங்கள் எடுத்தார். நியூசிலாந்து தரப்பில் மைக்கேல் பிரேஸ்வெல் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 237 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நியூசிலாந்து களம் கண்டது.

ரச்சின் ரவீந்திரா சதம் அடித்து அசத்தினார். ரொம்லேதம் அரைச்சதம் அடித்த நிலையில் 55 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் நியூசிலாந்து அணி 46.1 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் மட்டும் இழந்து 240 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா 112 ஓட்டங்கள் எடுத்தார். (எ)

## ரச்சின் ரவீந்திரா உலக சாதனை!

ராவல்பிண்டி, பெப்.26

ஐ. சி. சி. ஒருநாள் போட்டி தொடரில் ரச்சின் ரவீந்திரா வித்தியாசமான உலக சாதனை படைத்துள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதின.

இதில், நியூசிலாந்து அணி 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ரச்சின் ரவீந்திரா 112 ஓட்டங்கள் குவித்தார்.

நியூசிலாந்து இளம் வீரரான ரச்சின் ரவீந்திராவுக்கு இதுதான் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் முதல் போட்டியாகும். 'அவர் களமிறங்கிய முதல் போட்டியிலேயே சதமடித்து அசத்தியுள்ளார். இவர் கடந்த ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரிலும் களமிறங்கிய முதல் போட்டியிலேயே இங்கிலாந்துக்கு எதிராக சதம் அடித்திருந்தார்.

இதன் மூலம் ஐ. சி. சி. நடத்தும் ஒருநாள் தொடர்களான சம்பியன்ஸ் கிண்ணம் மற்றும் உலகக் கிண்ணத் தொடர்களில் களமிறங்கிய முதல் போட்டியிலேயே சதமடித்த வீரர் என்ற வித்தியாசமான உலக சாதனையை ரச்சின் ரவீந்திரா படைத்துள்ளார். (எ)

## எந்த அனுகூலமும் கிடைக்கவில்லை

### ரிஸ்வான் கவலை

டுபாய், பெப்.26

"நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றும் எந்த அனுகூலமும் கிடைக்கவில்லை"- இவ்வாறு முகமது ரிஸ்வான் தெரிவித்தார்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரில் டுபாயில் கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில், இந்தியா வெற்றி பெற்றது.

இந்த நிலையில் தோல்வி குறித்து பாகிஸ்தான் அணித் தலைவர் முகமது ரிஸ்வான் கூறுகையில், "நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றும் எந்த அனுகூலமும் கிடைக்கவில்லை. 280 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று நினைத்தோம். ஆனால், இந்திய பந்து வீச்சாளர்கள் வெகுவாக கட்டுப்படுத்தினர். நாங்களும் மோசமாக விளையாடி விக்கெட்களை இழந்ததால் 242 ஓட்டங்களுக்குள் அடங்கிப்போனோம். இந்த ஆட்டத்தில் நிறைய தவறுகள் செய்து விட்டோம். கோலி - கில் ஜோடி ஆட்டத்தை எங்களிடம் இருந்து பறித்து விட்டது"- என்றார். (எ)

## இலங்கை சாதனையை சமன் செய்த நியூசிலாந்து

ராவல்பிண்டி,பெப்.26

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது.

இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற 6ஆவது லீக்கில் நியூசிலாந்து அணி, பங்களாதேஷை எதிர்கொண்டது.

அத்தோடு, 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்றது.

இதனையும் சேர்த்து பாகிஸ்தான் மண்ணில் நியூசிலாந்து தொடர்ச்சியாக பெற்ற 6ஆவது வெற்றி இதுவாகும். இதன் மூலம் பாகிஸ்தானில் தோல்வியே சந்திக்காமல் தொடர்ச்சியாக அதிக வெற்றிகளைப் பதிவு செய்த வெளிநாட்டு அணிகளின் சாதனை பட்டியலில் இலங்கையை சமன் செய்துள்ளது. இந்த சாதனையில் 7 வெற்றிகளுடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது. (எ)

## சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் மே. இ. தீவுகள் வெற்றி!

மும்பை, பெப்.26

7 விக்கெட்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி மேற்கு இந்திய தீவுகள் அபார வெற்றி பெற்றது.

ஓய்வு பெற்ற வீரர்களுக்கான முதலாவது சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் ரி - 20 தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இதில் நவி மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் வட்சன் தலைமையிலான அவுஸ்திரேலியா மாஸ்டர்ஸ் அணி, லாரா தலைமையிலான மேற்கு இந்திய தீவுகள் அணியை எதிர்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, ஷேன் வட்சனின் அதிரடி சதத்தின் உதவியுடன் 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 216 ஓட்டங்கள் குவித்தது.

இதனையடுத்து 217 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணி ஆரம்பம் முதலே அதிரடியாக விளையாடியது. அந்த அணி 19. 2 ஓவர்களில் 3 விக்கெட்கள் மட்டும் இழந்து அபார வெற்றி பெற்றது. (எ)

## சுப்பர் ஓவரில் அசத்தல் உ.பி. வாரியர்ஸ் வெற்றி



பெங்களூரு, பெப்.26


சுப்பர் ஓவரில் அசத்திய உ.பி. வாரியர்ஸ் அணி வெற்றி பெற்றது.

5 அணிகள் இடையிலான 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பெங்களூருவில் உள்ள சின்னச்சாமி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற 9ஆவது லீக்கில் நடப்பு சம்பியன் பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் அணி, உ.பி. வாரியர்ஸுடன் மோதியது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூரு அணி 6 விக்கெட்கள் இழப்புக்கு 180 ஓட்டங்கள் சேர்த்தது.இதையடுத்து 181 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி விளையாடிய உ. பி. வாரியர்ஸ் அணி

20 ஓவர்கள் நிறைவில் 180 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து வெற்றி தோல்வியை நிர்ணயிக்க சுப்பர் ஓவர் முறை கடைப்பிடிக்கப்பட்டது. இதில், உ.பி. அணி திரில் வெற்றி பெற்றது. (எ)

## பிரைடன் கார்ஸ் திடீரென விலகல்




லண்டன், பெப்.26

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடைபெற்று வருகிறது.

இதில் "பி" பிரிவில் இடம்பெற்றுள்ள இங்கிலாந்து அணி தனது முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக தோல்வியை தழுவியது. இதனையடுத்து அரையிறுதிக்கு முன்னேற அடுத்த போட்டியில் கட்டாயம் வென்றாக வேண்டும் என்ற நெருக்கடியில் ஆப்கானிஸ்தானுடன் இன்று மோதுகிறது.

இதேவேளை, சம்பியன்ஸ் கிண்ணத்தின் எஞ்சிய போட்டிகளில் இருந்து காயம் காரணமாக இங்கிலாந்து அணியின் சகல துறை வீரர் பிரைடன் கார்ஸ் விலகியுள்ளார். இவருக்குப் பதிலாக ரெஹான் அகமது அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

## இந்திய அணிகள் அதிர்ச்சி தோல்வி




சென்னை, பெப்.26

ஹொக்கி போட்டிகளில் இந்திய அணிகள் அதிர்ச்சி தோல்வியடைந்தன.

6ஆவது புரோ ஹொக்கி லீக் போட்டி பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகின்றன. இதில் இந்தியாவின் புவனேஸ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த ஆட்டம் ஒன்றில் இந்தியா - இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி 2 - 3 என்ற கணக்கில் இங்கிலாந்திடம் போராடி தோற்றது.முன்னதாக இதே மைதானத்தில் மகளிர் பிரிவில் நடைபெற்ற ஆட்டத்தில் இந்திய அணி 2 - 4 என்ற கோல் கணக்கில் நெதர்லாந்திடம் தோல்வியடைந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கி...

சம்பவங்களில் 11 சம்பவங்கள் பாதாள உலகக் குழுவால் நடத்தப்பட் டவை. ஏனைய 6 சம்பவங்கள் காணி தகராறு போன்றவைகளால் இடம்பெற்றவை.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய 49 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், இதற்கு பயன்படுத்தப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி, பிஸ்டல் ரக துப்பாக்கிகள் 2 என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. இவை தவிர சட்டவிரோதமாக பயன்பாட்டில் இருந்த 4 ரி -56 ரக துப்பாக்கிகளும் 4 பிஸ்டல் ரக துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

மேலும், பாதாள உலகக் குழுவின் செயல்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்ட 5 மோட்டார் சைக்கிள்கள், 2 கார்கள், 2 வான்கள், 2 ஓட்டோக்கள் என்பவை கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

## நெருக்கடியான...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் மக்களுக்கு பயனுடையதாகவே உருவாக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் எதிர்கால திட்டங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இது ரணில் விக்கிரமசிங்கவின் வரவு - செலவு திட்டம், லிபரல்வாத திட்டம் , சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் என்று எதிர்க்கட்சியினர் பல விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். தேசிய மக்கள் சக்தியின் அடிப்படை கொள்கைக்கு பரஸ்பரமான வகையில் இந்த வரவு - செலவு திட்டம் முன்வைக்கப்படுகிறது என்றும் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையில் இவ்வளவு காலமும் புதிய லிபரல்வாத கொள்கைகள் செயல்படுத்தப்படவில்லை. லிபரல்வாத கொள்கை என்று குறிப்பிட்டுக் கொண்டு குடும்ப ஆட்சியையும் முதலா ளித்துவ கொள்கையையுமே கடந்த கால ஆட்சியாளர்கள் முன்னெடுத்தார்கள்.

அரச சேவை தொடர்பில் தற்போது பேசப்படுகிறது. எவ்விதமான முறையான வழிமுறைகளும் இல்லாமல்தான் தற்போதைய எதிர்க்கட்சியினர் அரசியல் சேவைக்காக அரச உத்தியோ கத்தர்களை கடந்த காலங்களில் அதி கப்படுத்தினர்.

கூட்டுப்பொறுப்பு, சமூக பொருளாதாரம் மேம்படுத்தல், சமவுடைமை ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் தான் வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பித்துள்ளோம்.

வங்குரோத்து நிலையடைந்த அரசாங்கத்தையே நாங்கள் பொறுப்பேற்றோம். அரச செலவுகளை இயலுமான வகையில் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நலன்புரி சேவைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார சவால்களுக்கு மத்தியில் மக்களுக்கு இயலுமான வகையில் நிவாரணமளிக்கப்பட்டுள்ளது. அதிக வளம் இருந்திருந்தால் மக்களுக்கு அதிகளவான நிவாரணம் வழங்கியிருப்போம்.

ஆசிரியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை என்றும் குறிப்பிடப்படுகிறது. பாடசாலை அதிபரின் சம்பளம் 30 ஆயிரத்து 105 ரூபாயாலும் ஆசிரியர்களின் சம்பளம் 25 ஆயிரத்து 360 ரூபாயாலும், இதர அரச சேவையாளர்களின் அடிப்படைச் சம்பளம் 15 ஆயிரத்து 750 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் ஒருசில வரையறைகளுக்கு மத்தியில் தான் அரச சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கு அமைய எதிர்வரும் காலங்களில் அரச மற்றும் தனியார் துறையினருக்கு சம்பளம் அதிகரிக்கப்படும் - என்றார். (ஐ)

## நாமல்...

இந்த கருத்து நாமல் ராஜபக்ஷவுக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுவதைக் காண்பிக்கிறது.

ஆளும் தரப்பிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறான கருத்துகளை வெளியிடுகின்றமை கவலைக்குரியது. நாமல் ராஜபக்ஷவுக்கு பொதுமக்களின் ஆதரவு அதிகரித்து வருவதால், அரசாங்கம் அவருக்கு தீங்கு இழைக்கும் நோக்கில் சதி செய்து வருகிறது.

இதுபோன்ற நடவடிக்கைகள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். எனவே, நாமல் ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## பொன் அணி...

வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்கள் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வழக்கமாக இரு தினங்களே நடத்தப்பட்டு வந்த இந்தப் பெருந்துடுப்பாட்டப் போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 175ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முதல் தடவையாக 3 தினங்கள் நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நடந்து முடிந்த 107 போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி 35 தடவைகளும் யாழ்ப்பாண கல்லூரி 16 தடவைகளும் வெற்றி பெற்றுள்ளன. 35 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன. ஒரு போட்டி முடிவின்றி கைவிடப்பட்டது.

இதேசமயம், இரு கல்லூரி அணிகளுக்கும் இடையிலான ராஜன் கதிர்காமர் கிண்ணத்துக்கான 32ஆவது ஒருநாள் போட்டி எதிர்வரும் மார்ச் 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதைத் தொடர்ந்து எதிர்வரும் மார்ச் 12ஆம் திகதி புதன்கிழமை பிற் பகல் 1.30 மணிக்கு அருட்திரு ஜி. ஏ. பிரான்சிஸ் யோசப் வெற்றிக் கிண்ணத் துக்கான ஐந்தாவது இருபது -20 போட்டி சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இம்முறை போட்டிகளில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு பற்குணம் மதுசன், யாழ்ப்பாண கல்லூரி அணிக்கு சிதம்பரலிங்கம் மதுசன் ஆகியோர் தலைமை தாங்கவுள்ளனர். (ஐ-05)

## பட்ஜெட்டின்...

வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இதேவேளை, அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களில் 159 பேரில் பங்கேற்ற 154 எம். பிக்கள் ஆதரவாக வாக்களித்தனர். ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன ஆகிய கட்சியினர் எதிர்த்து வாக்களித்தனர்.

முன்னதாக, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவு திட்டம் நிதி அமைச்சரான ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவால் கடந்த 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த 18ஆம் திகதி முதல் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெற்றது. 7ஆவது நாளான நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் விவாதங்கள் நடைபெற்றன. மாலை 6.10 மணியளவில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இரண்டாம் வாசிப்பை சபை அனுமதிக்கிறதா என்று கேட்டார்.

இதற்கு எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக வாக்கெடுப்பை கோரினார். இதன்படி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதேசமயம், வரவு - செலவு திட்டத்தின் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி நிறைவடையும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமைச்சுகளுக்கு ஒதுக்கிய நிதியை வினைத்திறனுடன் பயன்படுத்துங்கள்!

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்து

கொழும்பு, பெப். 26

வரையறுக்கப்பட்ட நிதிக் கட்டமைப்புக்குள் இருந்தாலும் அபிவிருத்தி, மக்களின் தேவைகளை அறிந்துகொண்டு இம்முறை வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த நிதியை வினைத்திறனாகவும் பயனுள்ள - நியாயமான முறையில் பயன்படுத்துவது அரசாங்க அதிகாரிகளின் பொறுப்பாகும் என ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்தார்.

நேற்றைய தினம் ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சுகளின் செயலாளர்களை சந்தித்தபோதே அவர் இவ்வாறு அறிவுறுத்தினார்.

இந்த சந்திப்பில், செலவு முகாமைத்துவத்தின் போது அரசாங்க அதிகாரிகள் உரிய பொறுப்புடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அரசாங்க சேவைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் நல்லதோர் எண்ணம் காணப்படவில்லை. அரச சேவைக்குள் காணப்படும் வினைத்திறன் இன்மையே இதற்கு காரணம்.

இதேபோல, அரச ஊழியர்களிடையே காணப்படும் திருப்தியின்மையே வினைத்திறன் இல்லாமைக்கு காரணமாக அமைந்துள் ளது. அந்த பிரச்னைகளை தீர்த்து அரச சேவையின் வினைத்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை உள்ளிட்ட அரசியல் அதிகார தரப்பும் செலவுகளை குறைத்திருக்கும் நிலையில், அரச நிறுவனங்களின் நிர்வாக செலவை குறைத்தல் மற்றும் விரயத்தை குறைத்தல் என்பன அரச சேவையின் பொறுப்பாகும் என்றும் கூறினார். (ஐ)

# குளித்துக் கொண்டிருந்தவர் மயங்கி வீழ்ந்து உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாணத்தில் குளித்துக்கொண்டிருந்தவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில், வவுனியா - தோணிக்கல் பகுதியை சேர்ந்த வடிவேலு சற்குணராசா (வயது 61) என்பவரே உயிரிழந்தார்.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருபவை வருமாறு,

உயிரிழந்த நபரும் அவரின் மனைவியும் நேற்றைய தினம் மரணச் சடங்கு ஒன்றில் கலந்துகொள்வதற்காக ஆனைக்கோட்டை - ஆறுகால்மடம் பகுதிக்கு வந்திருந்தனர். பின்னர் 1.30 மணியளவில் அருகில் இருந்த வீட்டுக்குச் சென்று குளித்துக்கொண்டிருந்தவேளை அவர் மயங்கி விழுந்துள்ளார்.

அவரை மீட்டவர்கள் யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனினும், அவர் சிகிச்சை பலனின் உயிரிழந்தார்.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (05)

## இலங்கையின்...

நல்லிணக்க பொறிமுறை தொடர் பான ஆலோசனை செயலணியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்மீது கவனம் பாய்ச்சுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இத்தகைய இருவழி அணுகுமுறையானது கடந்தகால ஆயுத மோதல் மற்றும் வன்முறைகளின் தாக்கங்களை உரியவாறு கையாள்வதற்கு ஏற்றவாறு எதிர்கால வாய்ப்புகளைப் பயன்படுத்துவதற்கான அடித்தளத்தை இட்டுள்ளது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## வறட்சி...

கூட்டத்தில் நேற்று முன்தினம் பங்கேற்ற அமைச்சர்,

மின்சார கட்டணம் 20 வீதம் குறைக்கப்பட்டுள்ளது. எனினும், வறட்சி தொடர்ந்தால் அதனை அதிக ரிக்க வாய்ப்புள்ளது. மின்சார சபை 14 ஆயிரம் கோடி ரூபாய் இலாபம் ஈட்டுவதாகக் கூறினாலும், மின்சார சபைக்கு எந்த இலாபமும் இல்லை.

மேலும் , கடந்த ஆண்டு 14 ஆயிரம் கோடி ரூபாய் இருந்தது. அது செலவுகளில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

## மகேந்திரனை...

நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. அவர் மீதான வழக்கு, அர்ஜுன மகேந்திரன் முன்னிலையிலோ அல்லது அவர் இல்லாமலோ தொடரும்.

சிங்கப்பூரில் ஒரு திருமண நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளதாகக் கூறி நாட்டை விட்டு அர்ஜுன மகேந்திரன் வெளியேறினார் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னர் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். மகேந்திரன் மீண்டும் நாடு திரும்புவதை உறுதி செய்வது முன்னாள் ஜனாதிபதியின் கடமை - என்றும் அவர் கூறினார். (ஐ)

## அரச...

பிரச்னையை எழுப்பி உரையாற்றிய போதே அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

மேலும், "அண்மையில் நான் எதிர்கொண்ட சம்பவமொன்று எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக காணப்படுகிறது. கடந்த 12ஆம் திகதி இரவு யாழ். வலம்புரி ஹோட்டலில் என்மீதும் எனது செயலாளர்மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நான் பொலிஸில் முறைப்பாடளித்துள்ளேன். சந்தேக நபரையும் கைது செய்தனர். எனினும், திடீரென எனக்கு எதிராக வழக்கொன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. இவை பாராளுமன்ற உறுப்பினராக நான் செயல்படுவதற்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை உருவாக்குகின்றது.

கணேமுல்லை சஞ்சீவ நீதிமன்றத்தில் கொலை செய்யப்பட்டுள்ளார். அதேபோன்று கடந்த வாரங்களில் பல்வேறு கொலை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவை எனது பாதுகாப்பு தொடர்பான கரிசனையை ஏற்படுத்துகின்றது.

ஆகவே, எனக்கு இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை ஒதுக்குமாறு கோருகின்றேன். இந்த வேண்டுகோளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொள்வதுடன், இந்த அவசர நிலைமையை கருத்தில் கொண்டு உங்களின் சாதகமான பதிலையும் உடனடியாக எதிர்பார்க்கிறேன் - என்றார்.

இதன்போது பதிலளித்த சபாநாயகர், சிறப்புரிமைகள் தொடர்பான பிரச்னைகள் காணப்படுமாயின், உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வரவு - செலவுத் திட்டத்தில் யாரையும் கைவிடவில்லை

## சபையில் கூறினார் பிரதமர்



கொழும்பு, பெப். 26

**அரசாங்கம் வரவு - செலவுத் திட்டத்தில் யாரையும் கைவிட வில்லை எனவும் பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரிவினரையும் உள் ளடக்கியுள்ளதாகவும் பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்தார்.**

நேற்று பாராளுமன்றத்தில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புள்ளிவிவரங்களுக்கு அப்பால் சென்று வரவு-செலவுத் திட்டத்தின் பின்னணியில் உள்ள சிந்தனையைப் படிக்குமாறு நாங்கள் உங்களை வலியுறுத்துகிறோம்.

எங்களுடைய எதிர்காலப் பய ணத்தின் அடிப்படை என்ன என் பதை வரவு - செலவுத் திட்டம் சுட்டிக்காட்டுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கைகளின் தொடர்ச்சியை நாங்கள் முன்வைப்பதாக குற்றம் சுமத்துகிறார்கள்.

அந்த வாதத்தை உருவாக்கும் எதிர்க்கட்சி எங்கள் தொலை நோக்கு பார்வையை புரிந்து கொள் ளவே இல்லை - என்றார். (அ)

# ஞானசாரதேரருக்கு பிணை!

கொழும்பு, பெப். 26

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை பிணையில் விடு தலை செய்யுமாறு கொழும்பு, மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இஸ்லாம் மதத்துக்கு எதிரான அவதூறான கருத்துக் களை வெளியிட்ட குற்றச்சாட்டின் கீழ் 9 மாதச் சிறைத் தண்டனை உத்தரவை அவர் எதிர்கொண்டுள்ளார்.

இந்த தண்டனைக்கு எதிராக ஞானசார தேரரின் சட் டத்தரணிகள் தாக்கல் செய்திருந்த மனுவை பரிசீலித்து, வழக்கு தொடர்பான மேன்முறையீட்டு மனு மீதான விசாரணை, இறுதித் தீர்ப்பு அறிவிக்கும் வரை குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு பிணை வழங்குமாறு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

கடந்த ஜனவரி 09 அன்று, கொழும்பு, நீதிவான் நீதிமன்றம் அவருக்கு எதிராக ஒன்பது மாத சிறைத்தண் டனை உத்தரவை பிறப்பித்தது.

தீர்ப்பை அறிவித்த கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேன, பிரதிவாதிக்கு 1500 ரூபா அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் 2016 ஜூலை 16 ஆம் திகதி கொழும்பு, கிருலப்பனை பிரதேசத்தில் நடை பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, “இஸ்லாம் ஒரு புற்றுநோய். அதனை ஒழிக்க வேண்டும்” என குறிப் பிட்டு இன நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையி லான கருத்தை வெளியிட்டமைக்காக அவருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பாலியாறு நீர் திட்டம் கைவிடப்படக்கூடாது!

## சீ.வீ.கே. சிவஞானம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 26

பாலியாறு நீர் வழங்கல் திட்டம் கைவிடப்படக் கூடாது எனவும், அதன் நடவடிக்கைகள் தொடர்ச்சி யாக முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவ ஞானம் தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சபை, யாழ்ப் பாண மாவட்ட மக்களுக்கான நீர் விநியோகத்திற்கென வருடம் பூரா கவும் கடலைச் சென்றடையும் நீரை திசை திருப்பும் திட்டமாக, பாலி யாறு நீர் விநியோகத் திட்டத்தை முன்மொழிந்திருந்தது.

இந்தத் திட்டத்தை, செலவுச் சிக்கனமான, சாத்தியமான அவசர மான ஒன்றாக பரிசீலித்து ஏற்றுக் கொண்டு முன்னுரிமை அடிப்படை யில், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கி ணைப்புக்குழு சிபாரிசு செய்தது.

2024 வரவு - செலவுத் திட்டத் தில், பாலியாறு நீர் வழங்கல் திட் டத்திற்கென 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டப் பணிமனையும், உத்தியோகபூர்வ மாக வெள்ளாங்குளத்தில் 2024 மே மாதம் 15 ஆம் திகதி அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் தொடர் நிறைவேற்றலுக்கான நிதி ஒதுக்கீடு எதுவும் 2025 வரவு - செலவுத் திட் டத்தில் உள்ளடக்கப்படாமையை இட்டு, மிகவும் கவலையும் ஏமாற்ற மும் அடைகிறோம்.

இந்தத் திட்டம் கைவிடப்பட்ட மாதிரியான தோற்றப்பாடு காணப் படுகின்றது.

எனவே இந்தத் திட்டத்தின் நிறை வேற்றலுக்கான போதிய நிதியை, தற்போது பரிசீலிக்கப் படும் வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கீடு செய்து, அதன் துரித நிறைவேற்றத்திற்கான பணிப் புரையை வழங்கவேண்டும் என, அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்

என வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞா னம் அந்த கடிதத்தில் குறிப்பிட் டுள்ளார். (அ)

# லொறி - கார் விபத்து 15 பேருக்கு காயம்!

கொழும்பு, பெப். 26

சிறிய ரக லொறியும் காரும் மோதிய விபத்தில் 15 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை திஸ்ஸ மஹாராம - கதிர்காமம் வீதியில் 07ஆவது கிலோமீற்றர் மைல்கல் அருகில் உள்ள விகாரை ஒன்றுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இதில், லொறியில் பயணித்த 10 பேரும் காரில் பய ணித்த 5 பேரும் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டனர். (இ)

# ஜனாதிபதி அநுரகுமாரவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்!

## புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 26

பல்வேறு பொதுக் கூட்டங்களின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொதுவில் தோன்றுவது அவரது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக புலனாய்வு அமைப்புகள் அடையாளம் கண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தி யில் இந்த விடயம் தெவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நடைபெற்று வரும் பாதாள உலக நடவடிக்கைகள் உட்பட சில நடவடிக்கைகள் படிப்படியாக அதிகரித்து வருவதாகவும், அந்த பாதாள உலக நடவடிக்கைகளுக்குப் பின்னால் வேறு ஏதேனும் செல்வாக்கு உள்ளதா என்ற சநதேகம் பாதுகாப்புப் படையினருக்கு இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, தொடர்புடைய பாதாள உலக நடவடிக்கைகளுக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதை புலனாய்வு அமைப்புகள் தொடர்ந்து விசாரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சமீப நாட்க ளாக மக்களிடம் நெருங்கமாக இருப்பதையும், கூட்டங் களை நடத்துவதையும், அவர்களுடன் சுமுகமாகப் பேசுவதையும் காண முடிகிறது.

இந்த நடைமுறை ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பொருத்தமானதல்ல என்ற கருத்தையும் சில விமர்சகர் கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

தேசிய பாதுகாப்புக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை என்று ஜனாதிபதியும் அரசாங்கமும் கூறியுள்ளனர்.

ஆனால் இந்த நேரத்தில் ஜனாதிபதியின் பாதுகாப்பு குறித்து உத்தரவாதம் அளிக்க, அவரது பாதுகாப்பு கண் டிப்பாக உறுதி செய்யப்படவேண்டும் என்று பல தரப்பினர் கருதுகின்றனர். இதன் காரணமாக, பொதுமக் களுக்கு அருகாமையில் இருப்பதைக் குறைக்குமாறு பாதுகாப்புப் படையினர் ஜனாதிபதிக்கு அறிவுறுத்தி யுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# நாமல் ராஜபக்ஷவுக்கு கொலை அச்சுறுத்தல்!

## டி.வி. சானக குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 26

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு தேசிய மக்கள் சக்தியின் பிரதி அமைச்சர் ஒருவர் கொலை மிரட் டல் விடுத்துள்ளதாக அக்கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர் டி.வி. சானக தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாங்கள் தொடர்ச்சியான அடக்குமுறைகளை கண் டுள்ளோம், தொடர்ச்சியான அச்சுறுத்தல்களைக் கண் டுள்ளோம். அரசாங்கத்தில் உள்ள ஒரு பிரதி அமைச்சர், எங்கள் கட்சித் தலைவர் நாமலிடம், கிராமத்துக்குச் சென்றால், குழிக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று கூறுகிறார். உங்களுடைய இந்தப் பிரதி அமைச்சர், நாமல் ராஜ பக்ஷ கிராமம் கிராமமாகச் சென்றால், அவர் நரகத் துக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்று கூறுகிறார்.

ஒருபுறம், நாட்டில் நடக்கும் அனைத்து பாதாள உலக நடவடிக்கைகளுக்கும் ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது குற்றம் சாட்டப்படுகிறது. மறுபுறம், பிரதி அமைச் சர் நேரடியாக கொலை மிரட்டல் விடுத்து, குழிக்குள் செல்ல வேண்டியிருக்கும் என்று கூறுகிறார்.

இது பெலவத்தையில் இருந்து தீட்டப்பட்ட திட் டமா? இது அனைத்து ஊடகங்களிலும் செய்தியாக வெளியிடப்பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷ கிராமம் கிரா மமாகச் செல்கிறாரா என்று ஊடகங்கள் கேள்வி எழுப்பு கின்றன. பின்னர் அமைச்சர் கிராமத்திற்கு அல்ல, குழிக் குத்தான் போக வேண்டும் என்று கூறுகிறார்.

இவைதான் அச்சுறுத்தல்கள். ஜே.வி.பி.யின் பண்பு கள் வெளிவருகின்றன - என்றார். (அ)

# தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என சிலர் தவறான பிரசாரம் முன்னெடுப்பு!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 26

நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோ கத்தை அடிப்படையாகக் கொண்டு தேசிய பாதுகாப் புக்கு அச்சுறுத்தல் என தவறான பிரசாரம் முன்னெ டுக்கப்படுவதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவம் குறித்து மிகத் தீவிரமான விசாரணைகள் முன் னெடுக்கப்படுகின்றன. பாதாள உலகக் குழுவினரை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியின் பணிப் புரையின்பேரில் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

நீதிமன்றச் சம்பவத்துடன் தொடர்புடையோரை நாம் நிச்சயமாக சட்டத்தின் முன் நிறுத்துவோம்.

பாதாள குழுவினருடன் அரசியல்வாதிகள் தொடர்பு பட்டிருப்பது விசாரணைகள் மூலம் தெரியவருமாயின் அவர்கள் பற்றிய விவரங்கள் வெளியிடப்படும். நாட் டில் கடந்த கால அரசாங்கங்களைப் போன்று பாதாளக் குழுவினருக்கு வழங்கப்பட்ட அரசியல் பாதுகாப்பு தற்போது கிடையாது.

அதேபோன்று தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என எதிர்க்கட்சியினரால் பிரசாரம் முன்னெடுக்கப்படு கின்றது. தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்ற விடயத்தை ஜனாதிபதியும் பொதுமக்கள் பாது காப்பு அமைச்சரும் தெரிவித்துள்ளார்கள் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.02.2025 அன்று
ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible]த்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org